விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 09 வெள்ளிக்கிழமை (22.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 34

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

# இராணுவ ஆட்சியை அமைக்கும் பின்னணியில் ஜனாதிபதி மகிந்த!

## மக்கள்விடுதலை முன்னணி கூறுகின்றது

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் ஜனவரி 26ஆம் திகதி ஜனாதிபதி சந்திக்க உள்ள தோல்வியை அறிந்து இராணுவ அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் பின்னணியை இராணுவ அதிகாரிகள் ஊடாக உருவாக்கி வருவதாக ஜெனரல் சரத் பொன்சேகாவின் இணை ஊடகப் பேச்சாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார். *(16ஆம் பக்கம் பார்க்க)*

## புலிகளிடமிருந்து பிளவடைவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி காரணமல்ல

### அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து தாம் பிளவடைவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி காரணமல்ல என தேச நிர்மாண அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து பிளவடைந்து வந்தபோது ஐக்கிய தேசியக் கட்சியே தமக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடமிருந்து பிளவடைய வேண்டும் என்பது தமது தனிப்பட்ட தீர்மானம் எனவும், அதில் எவரும் அழுத்தம் செலுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். *(16ஆம் பக்கம் பார்க்க)*

## கொழும்பில் நேற்று மூவர் கைது


(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்ய திட்டமிட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூன்று பேரை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை, இரகசிய பொலிஸாரின் உதவி அதிபர் நந்தன முனசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் கைது செய்யப்பட்டவர்கள் யார் என்ற தகவலையோ *(16ஆம் பக்கம் பார்க்க)*

## யாருக்கு ஆதரவு வழங்குவதென்ற கூட்டமைப்பின் முடிவு காத்திரமானது



### ஜனாதிபதி வேட்பாளர் இலியாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப் பது என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு எடுத்த முடிவு காத்திரமானது என சுயேட்சையாக போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் இலியாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று வீரசிங்க மண்டபத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வளவு காலத்திற்குப் பின்னர் ஒரு தமிழ் தலைமை நேரடியாக ஒரு சிங்கள தலை மையை ஆதரித்தது இதுதான் சரித்திரத்தில் முதற்தடவை. *(16ஆம் பக்கம் பார்க்க)*

## வன்முறையற்ற தேர்தலை நடத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

### ஐ.நா. செயலர் பான் கீ மூன் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை வன்முறையற்ற முறையில் நடத்துவதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் உயர்வு தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு உன்னிப்பாக கவனித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தேர்தலுக்கு முன்னரும் அதற்குப் பின்னரும் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்ட வகையில் செயற்படவேண்டும்.

குறிப்பாக தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் *(16ஆம் பக்கம் பார்க்க)*

## பகிரங்க விவாதத்துக்கு வருமாறு ஜனாதிபதிக்கு பொன்சேகா அழைப்பு

(கொழும்பு)

ஊடகங்களின் ஊடாக பல்வேறு நபர்களைப் பயன்படுத்தி பொய்யான செய்திகளை வெளியிடாது எதிர்வரும் நான்கு தினங்களுக்குள் பகிரங்க விவாதமொன்றுக்கு வருமாறு ஜனாதிபதிக்கு மீண்டும் சவால் விடுப்பதாக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அக்குரெஸ்ஸ மற்றும் வலஸ்முல்ல பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

விவாதத்தில் கலந்து கொண்டு தன்மீது சுமத்தப்படும் சகல குற்றச்சாட்டுக்களுக்கும் பதிலளிக்க முடியுமென தெரிவித்துள்ள பொன்சேகா, இதன்போது தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார். நாம் மேற்கொண்டுள்ள இந்தப் பயணத்தை எந்த சக்திகளாலும், எவ்வித் திலும் தடுக்க முடியாது என்பதை உறுதியாக கூறுகிறோம். *(16ஆம் பக்கம் பார்க்க)*




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்னிப் போரில் எமக்குத் தேவைப்பட்ட ஆயுதங்களை வழங்க சில நாடுகள் மறுத்தன

## மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தெரிவிப்பு

போர் உக்கிரமாக நடைபெற்ற போது எமக்குத் தேவைப்பட்ட அவசர ஆயுத உதவிகளை கூட சில நாடுகள் தடுத்திருந்ததாக 55 ஆவது படையணியின் முன்னாள் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினி தொலைக்காட்சிக்கு அவர் வழங்கிய நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போர் உக்கிரமாக நடைபெற்ற போது இலங்கை அரசுக்கு அவசரமாகத் தேவைப்பட்ட ஆயுதக் கொள்வனவுகளை அனைத்துலக சமூகத்தைச் சேர்ந்த பல நாடுகள் நிராகரித்திருந்தன.

சில சந்தர்ப்பங்களில் அவசரமாகத் தேவைப்பட்ட ஆயுதங்களை எடுத்து வந்த விமானங்களையும் தமது வான்பரப்பின் ஊடாக அந்த நாடுகள் அனுமதிக்கவில்லை.

இறுதிப் போரில் இலங்கை வான் படை அதிக பங்களிப்பை வழங்கியிருந்தது. 55 ஆவது படையணியின் தாக்குதல்களுக்கு மிகையொலி தாக்குதல் விமானங்களும், எம்.ஐ. 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளும் அதிக பங்களிப்பை வழங்கியிருந்தன.

நீரேரிகளை கடக்கும் போதே இராணுவம் அதிக சவால்களை சந்தித்திருந்தது. அந்த சமயங்களில் காயமடைந்த படையினரை அகற்றுவதில் வான்படை அதிக உதவிகளை வழங்கியிருந்தது.

ஆளில்லாத உளவு விமானங்கள் மூலம் எடுக்கப்பட்ட படங்கள் எமக்கு அதிக உதவியாக இருந்தது. களத்தின் உடனடியான தன்மைகளை அறிந்து திட்டங்களை வகுக்க அது பெரும் உதவியாக இருந்தது.

நாம் அதிகளவு இராணுவத்தினரை திரட்டி அதிக படை வலு கொண்டு மோதியதனால் தான் வெற்றிபெற்றோம். புதிதாக அதிகளவு படையினரை சேர்க்காது விட்டால் எம்மால் வெற்றிபெற்றிருக்க முடியாது. மகிந்த ராஜ பக்ஷவின் அரசு அதிக போர் வலுவை இந்தப் போரில் பயன்படுத்தியிருந்தது எனத் தெரிவித்துள்ளார்.

4 ஆவது ஈழப் போரில் 55 ஆவது படையணியை சாலை பகுதியூடாக வழிநடத்திய மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தற்போது திருமலையில் உள்ள 22 ஆவது படைப்பிரிவின் இராணுவத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

தேர்தல் விதிமுறைகளை மீறி அரசு படை அதிகாரிகளை தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தி வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன. இராணுவத்தின் மூத்த அதிகாரிகளான மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன (முன்னாள் 53 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி), மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா (முன்னாள் 58 ஆவது படையணியின் கட்டளைஅதிகாரி), மேஜர் ஜெனரல் சாகிகலகே (சிறப்புப் படைப்பிரிவு கட்டளை அதிகாரி) ஆகியோர் அரச ஊடகங்களில் தோன்றி அரசுக்கு ஆதரவாக பிரசாரங்களை மேற்கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே வாகரையில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையை தொடர்ந்து மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவுக்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை தொடர்ந்து பிரசன்ன சில்வா இராணுவத்தில் இருந்து சுயமாக ஓய்வுபெற்று சென்றிருந்தார். எனினும் பின்னர் வன்னி படை நடவடிக்கையின் போது அவர் கோத்தபாயவின் நேரடி வேண்டுகோளை தொடர்ந்து முகமாலை களமுனைக்கு கொண்டுவரப்பட்டிருந்தார். தற்போது பொன்சேகாவுக்கு எதிரான தனது தாக்குதலை மேற் கொள்ள பிரசன்னாவுக்கு அரசு களம் அமைத்து கொடுத்துள்ளதாக படைத்துறை அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ச)

## அமைப்பாளர் கைது

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இடதுசாரி கட்சியின் வேட்பாளர் விக்கிரமபாகு கருணாரட்ணவின் யாழ்.மாவட்ட தேர்தல் அமைப்பாளர் மாணிக்கசோதி நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பகுதியில் தேர்தல் அறிக்கையை விநியோகம் செய்து கொண்டிருந்த போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## சமூக விஞ்ஞான சான்றிதழ் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2009/2010ஆம் கல்வியாண்டுக்கான சமூக விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறி சமூக விஞ்ஞான கலைப்பட்டக் கற்கை நெறிக்கான பதிவுகள் மற்றும் மீள் பதிவுகள் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் பகல் 12.30 மணி வரை யாழ்-பிராந்திய நிலையத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இப் பதிவுகள் சமூகவியல் பீட துறைத்தலைவரால் மேற்கொள்ளப்படவிருப்பதனால் குறிப்பிட்ட திகதியில் மட்டுமே நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## முதுமாணி மாணவர்கள் களப்பயணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகள் பீட பொது நிர்வாக முதுமாணி மாணவர்கள் யாழ்.மாவட்டத்தில் பிரதேச திட்டமிடல் அபிவிருத்தி தொடர்பான களப்பயணத்தை பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நாளை சனிக்கிழமை மேற் கொள்ளவுள்ளனர்.

இம்மாணவர்களில் பெரும்பாலானவர்கள் யாழ்.மாவட்ட அபிவிருத்தி தொடர்பான உயரதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது. வழுக்கையாறு, கீரிமலை, தொண்டைமானாறு, மணற்காடு, புனித நகர் மீள்குடியேற்றம் மற்றும் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் இடம் பெறும் இக்களப்பயணத்தில் பல அபிவிருத்தி மீள்திட்டம் தொடர்பாக ஆராயப்படும். (ந)

# ஆங்கிலக் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினால் நடத்தப்படவிருக்கும் சுய நிதிதிட்டத்தின் அடிப்படையிலான ஒரு வருட கால தராதரப்பத்திர/ டிப்ளோமா ஆங்கில மொழி (விரிவாக்கற்) கற்கைநெறி 2009/2010 கல்வி ஆண்டிற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

டிப்ளோமா கற்கை நெறிக்கு யாதாயினும் உயர் கல்வி நிறுவனத்தினால் (வவுனியா வளாகம்/திறந்த பல்கலைக்கழகம்/ தொழில் நுட்பக் கல்வி மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய) நடத்தப்பட்ட ஓராண்டு ஆங்கில தராதரப் பயிற்சி நெறியில் சித்தி பெற்றிருப்பதுடன் வவுனியா வளாகத்தினால் நடத்தப்படும் தெரிவுப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும் சிரேஷ்ட உதவி நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் எனும் பெயருக்கு எடுக்கப்பட்ட ரூ100 பெறுமதியான (காசுக் கட்டளையினை சுய விலாசமிடப்பட்ட 9X6 அளவுடைய ரூபா 30 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் இணைத்து அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இம்மாதம் 28ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு உதவிப் பதிவாளர்/ நிர்வாகமும் தாபனமும், வவுனியா வளாகம், பூங்கா வீதி வவுனியா எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். (ந-3)

# அரச ஊடகங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

உயர்நீதிமன்றம் மற்றும் தேர்தல் ஆணையாளர் வழங்கிய உத்தரவுகளை மீறி ஊடக வன்முறையில் ஈடுபட்டுள்ள அரசாங்க ஊடகங்களைக் கண்டித்து நேற்று மதியம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை அரச மற்றும் சுயாதீன ஊடகங்களின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. அரச ஊடகங்கள் ஒரு பக்கச் சார்பாக செயற்பட்டு வருவதாக ஊடக அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

குறிப்பாக ஆளும் கட்சி ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் வகையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒருபக்கச் சார்பான பிரசாரங்களை மேற்கொள்வதனால் அரசாங்க ஊடகங்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

தனிப்பட்ட ஓர் வேட்பாளரின் விளம்பரங்கள் மற்றும் பிரசாரப் பணிகளை மேற் கொள்வதன் மூலம் அரசாங்க ஊடகம் மில்லியன் கணக்கான ரூபாக்களை இழப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

# சன்டேலீடர் ஆசிரியர் கொலை நேரில் பார்த்த சாட்சி உண்டு

சன்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலைசெய்யப்பட்டபோது, அதனை நேரில் பார்த்த சாட்சியாளர் ஒருவர் இருப்பதாகவும் அவர் பற்றிய தகவல்களை வெளியிட முடியாது எனவும் இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலை தொடர்பான விசாரணைகள் கல்கிசை நீதிமன்றத்தில் நேற்று நடை பெற்றபோதே இரகசிய பொலிஸார் இதனைத் தெரிவித்துள்ளனர்.

சாட்சியாளரிடம் தாம் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்திவருவ தாகவும் மேலதிக விசாரணைகளை நடத்த நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் எனவும் இரகசிய பொலிஸார் கோரிக்கை விடுத்தனர். சாட்சியாளரிடம் விசாரணை நடத்த அனுமதி வழங்கிய நீதவான் ஹர்ச சேதுங்க, வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

மிரிஹான மற்றும் கல்கிசை பொலிஸாரினால் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வந்ததுடன் அண்மையில் இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை**
**முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்**
**வணிகமாணி/ தொழில் நிர்வாகமாணி**
**இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் 2008**

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் இரண்டாம் அரையாண்டு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் 25.01.2010ம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மீள் பரீட்சைக்கு தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50/= பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கி கிளையில் செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 18.02.2010அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

✶ **முதலாம் வருடம் முகாமைத்துவ கற்கை நெறி முதலாம் அரையாண்டு பரீட்சைகள் 2009.**

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் முதலாம் வருட முகாமைத்துவ கற்கை நெறி முதலாம் அரையாண்டு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் 25.01.2010ம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 18.02.2010 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகிறார்கள்.

**பதிவாளர்** (C-4315)

**வாடகைக்கு**

ஆஸ்பத்திரி வீதியில் பழைய மீன் சந்தைக்கு அருகாமையில் 60அடி நீளம், 18அடி அகலம் உள்ள 1ஆம் மாடி கடை வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 077 7283811

(393)

**காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி கோயில் மகோற்சவ பாலஸ்தாபன விஞ்ஞாபனம்**

விரோதி வருடம் தைத்திங்கள் 8ஆம் நாள் (21.01.2010) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான பத்துநாள் உற்சவம் நடைபெறும்.

மகோற்சவ குரு சிவஸ்ரீ.கு. சண்முகராஜக்குருக்கள் (ஆலயகுரு)

| | | |
|---|---|---|
| 21.01.2010 | வியாழக்கிழமை | கொடியேற்றம் |
| 27.01.2010 | புதன்கிழமை | வேட்டைத் திருவிழா |
| 28.01.2010 | வியாழக்கிழமை | பெரிய சப்பறம் |
| 29.01.2010 | வெள்ளிக்கிழமை | தேர்த்திருவிழா |
| 30.01.2010 | சனிக்கிழமை | தீர்த்தம்/ கொடி இறக்கம் |
| 02.02.2010 | செவ்வாய்க்கிழமை | வைரவர் பொங்கல் |

அடியார்கள் அனைவரும் இவ் விழாவில் பங்குபற்றி எம் பெருமான் இஷ்ட சித்திகளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
திருவிழா உபயகாரர்கள்

(C-4316)

**விரிவுரையாளர்கள் தேவை**

பிரபல கணனி நிறுவனம் ஒன்றிற்கு விரிவுரையாளர்கள் தேவை. தகைமையுடையோர் 26.01.2010 இற்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்கு சுயவிபரங்களை அனுப்பி வைக்கவும்.

"சக்தி வாசா"
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(395)

**தவறிவிட்டது**

20/01/2010 அன்று திருநெல்வேலி வீதி,கே.கே.எஸ் வீதி, ஆனைக்கோட்டை நவாலி வீதி, சங்கானை வீதி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களுக்கிடையில் 02 பற்றுச்சீட்டுத்தங்கங்கள் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(392) T.P.NO. 077 9854992

# தேர்தலை முன்னிட்டு நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

## ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை அமைதியான முறையில் நடத்துவதற்கு நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்றும் தேசியப் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்துவதற்காக சூழ்ச்சிகள் மேற்கொள்படுகின்றன. அதனை ஐ.தே.க அல்ல மக்கள் விடுதலை முன்னணியே செய்கிறது. அடையாள அட்டை பிரச்சினை ஏற்படுவதற்கு அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்காது.

பாதுகாப்பு வழங்குவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. வரும் தேர்தலில் அரசாங்கத்துக் கணிசமான வாக்குகள் கிடைப்பது தொடர்பான உறுதிப் பாடொன்று இருக்கிறது. அதனால் வன்செயல் மூலம் வெற்றி பெறுவதற்கு எவ்வித தேவையும் இல்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2-6)

# இராணுவ ஆட்சியை ஏற்படுத்த பொன்சேகா முயற்சிக்கிறார்

## விஸ்வ வர்ணபால தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதிகளை துணையாகக் கொண்டு ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவ ஆட்சியை ஏற்படுத்த முயற்சித்து வருவதாக உயர் கல்வி அமைச்சர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

ஹிட்லர், இடியமீன் போன்ற சர்வாதிகாரிகள் தங்களது ஆலோசகர்களாக இராணுவத் தளபதிகளை நியமித்திருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது ஹமில்டன் வனசிங்க, சிறில் ரணதுங்க போன்றவர்களை ஜெனரல் சரத் பொன்சேகா தனது தேர்தல் பிரச்சார நடவடிக்கைளுக்காக பயன்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிட்டம்புவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்துள்ளார். (2-6)

# நாட்டுக்கூத்து போட்டிகளும் அவற்றுக்கான விதிமுறைகளும்

(அல்வாய்)

வடமாகாணக் கல்வித்திணைக் களத்தினால் நாட்டுக்கூத்துப் போட்டிகளும் விதிமுறைகளும் அடங்கிய திருத்த சுற்றறிக்கை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கைக்கு அமைவாக பாடசாலை அதிபர்கள் மாணவரை ஆயத்தம் செய்து எதிர்வரும் பெப்பரவரி மாதம் 19ஆம் திகதிக்கு இடையில் விண்ணப்பங்களை முழுவிபரத்துடன் தத்தம் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

இதில் நாட்டுக்கூத்துப் போட்டிகள் மார்ச் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது எனவும் போட்டி நிகழுமிடம் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என வடமாகாண கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

இம்முறை வடக்கு கிழக்கில் பாரம்பரிய கூத்துக்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் நாட்டுக் கூத்து போட்டியானது தனித்துவமாக நடைபெறவுள்ளது. ஒவ்வொரு பிரிவிலுமுள்ள கூத்துக்கள் ஒவ்வொன்றினதும் நேரம் 30 நிமிடங்கள் என குறிப்பிடப்படுகிறது.

மேலும் வடமோடிக்கூத்து, தென்மோடிக் கூத்து (ஆட்டக்கூத்து), சிந்துநடைக்கூத்து, விசேட கூத்துக்கள், இசை நாடகம் ஆகிய கூத்துவகைகளும் இசைநாடகமும் போட்டியில் அனுமதிக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது. (2-4-19)

# நளினி விடுதலை குறித்து இந்திய ஆலோசனைக்கு பரிந்துரை

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை குற்றவாளிகளில் ஒருவரான நளினி வேலூர் பெண்கள் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ராஜீவ் கொலை வழக்கில் இவ



ருக்கு முதலில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. சோனியா காந்திக்கு இவர் எழுதிய மனுவின் காரணமாக சோனியா பரிந்துரையின் பேரில் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கும் ஆயுள் கைதிகளை நன்னடத்தையின் பேரில் தலைவர்களின் பிறந்தநாளில் விடுதலை செய்து வருகிறது அரசு. அந்த வகையில் 10 ஆண்டு களுக்கு மேல் சிறையில் இருந்து வரும் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று நளினி கோரி வருகிறார்.

இது தொடர்பாக அவர் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு நான் 18 ஆண்டுகள் மூன்று மாதங்களாக தமிழக சிறைகளில் இருக்கிறேன். என் கணவர் முருகன் வேலூர் மத்திய சிறைச்சாலையில் மரண தண்டனைக் கைதியாக இருக்கிறார். ஏழு ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் பூர்த்தி செய்த ஆயுள் கைதிகளை ஆண்டுதோறும் தமிழக அரசு விடுதலை செய்து வருகிறது. என்னை மட்டும் விடுதலை செய்யவில்லை.

என் வழக்கில் சென்ற ஆண்டு சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை இதுவரை செயல்படுத்தவில்லை. என் பெற்றோர் வயதானவர்கள். அவர்களுக்கும் பருவமடைந்த என் மகளுக்கும் என் ஆதரவும் அரவணைப்பும் அவசியம் தேவை. எனவே இந்த ஆண்டு அண்ணாதுரை பிறந்தநாளின் போது விடுதலை செய்யப்படும் ஆயுள் கைதிகளுடன் என்னையும் விடுவிக்க வேண்டுகிறேன் என்று மனு எழுதியிருந்தார்.

இதே வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று ஆண்கள் மத்திய சிறையில் உள்ள தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று ரொபர்ட் பயாஸ் கோரிக்கை விடுத்தார். இருவரும் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் திடீர் உண்ணாவிரதம் இருந்தனர்.

ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டு மூவரையும் விடுவிப்பது குறித்து அதில் ஆலோசிக்கப்படும் என உறுதியளித்ததையொட்டி உண்ணாவிரதத்தை அவர்கள் கைவிட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் கூடிய ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக மாவட்ட முதன்மை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி, மண்டல நன்னடத்தை அலுவலர், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் இருவர், சிறைத்துறை கண்காணிப்பாளர் என மொத்தம் 6 பேர் இடம் பெற்றனர். இவர்கள் சிறைக் கைதிகள் 11 பேரின் தண்டனை காலங்கள், நன்னடத்தைகள் குறித்து விவாதித்தனர்.

ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் 11 பேரில் நளினியை மட்டும் விடுதலை செய்யலாம் என்று ஆலோசனைக் குழு பரிந் துரை செய்துள்ளது. நளினி விடுதலை செய்யப்படுவாரா என்பது குறித்து அரசு தான் இனி முடிவு செய்யும். அரசின் முடிபு விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (2-6)

# மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கு திறப்பு விழா

(கொழும்பு)

ஹோமாகம தியகமவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கு ஜனாதிபதியினால் மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

இவ்விளையாட்டரங்கின் நிர்மாணப் பணிகள் 2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

126 ஏக்கர் காணியில் அமையப்பெற்றுள்ள இதில் மெய்வல்லுனர்களுக்கான அரங்கு, ரக்பி அரங்கு, உதைப்பந்தாட்ட அரங்கு மற்றும் நீச்சல் தடாகம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. இவ்வரங்கைச் சுற்றி ஒரே நேரத்தில் 5 ஆயிரம் பார்வையாளர் அமர்ந்திருக்கக்கூடிய இருக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன. (2-6)

## அடிக்கல் நாட்டும் விழா

(யாழ்ப்பாணம்)

இசுறுபாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் யாழ். புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் விழா நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (2-30)

# யாழ். மாநகர சபை ஊழியர்களின் டெங்குஒழிப்பு நடவடிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

தீவிரமடைந்துள்ள டெங்கு நோயின் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் வகையில் யாழ். மாநகர சபை ஊழியர்களும் தமது பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மாநகர சபை வளாகப்பகுதியில் மேற்கொண்டு வரும் இப்பணிகள் தினமும் காலை 8மணி தொடக்கம் 1 மணி வரையும் இடம்பெறுவதாகவும் இதில் சிரமதானப் பணிகள் மற்றும் பற்றைகளை துப்பரவு செய்து கழிவுகளை அகற்றல் போன்றனவும் செய்யப்பட்டுவருவதாக மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (2-30)

# சல்வீனியா அகற்றும் பணி

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயின் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் விதத்தில் யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள குளங்களில் சல்வீனியா அகற்றும் பணி துரிதமாக இடம்பெற்று வருகின்றது.

இதில் மடம் வீதியில் உள்ள தேலோரிக் குளத்தில் கடந்த 20 நாட்களாக நடைபெற்ற இப்பணிகள் முடிவடைந்துள்ளதாகவும் தற்போது முனீஸ்வரன் வீதிக்கு அருகாமையில் உள்ள புல்லுக்குளத்தில் கடந்த 5 நாட்களாக சல்வீனியா அகற்றும் பணி நடைபெற்று வருகின்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் நீர் வழங்கல் பிரிவு பொறியியலாளரினால் முன்னெடுக்கப்படும் இப்பணியில் 10 தொழிலாளர்களை கொண்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாநகர சபையின் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (2-30)








சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற வீரருக்கு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பரிசு வழங்குவதையும், அருகில் கழகத்தின் தலைவர் நிற்பதையும், தைப்பொங்கலை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறுவர்களுக்கான பல்றன் உடைத்தல் போட்டியில் பங்குபற்றிய சிறுவர்களையும் படங்களில் காணலாம்.

## ஆதனவரியினை செலுத்தவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை பிரிவில் இதுவரைக்கும் ஆதனவரியினை செலுத்தாது நிலுவை வைத்திருப்பவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி அதற்குரிய கழிவினை பெற்று பயனடையுமாறு பிரதேச சபையினர் கேட்டுக்கொள்கின்றனர். (6-30)

## டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையினரால் நேற்று முன்தினம் முதல் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

குறித்த கிளையினரால் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டு வருவதுடன் சிரமதானம், தெருவீதி நாடகங்கள் என்பனவும் நடத்தப்பட்டு வருகின்றன.

இச் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் இச் சேவையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் அனர்த்த இடர்குறைப்பு குழுவினர், யாழ்.மாவட்ட கிளையின் தொண்டர்கள் ஆகியோர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (4-134)

## மீள்குடியேறிய மக்களுக்கான உணவல்லாத பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா முகாம்களிலிருந்து வந்து யாழ். குடாநாட்டின் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கான உணவல்லாத பொருட்கள் விநியோகம் நடைபெற்றுள்ளது.

இதற்கமைய இதுவரை காலமும் உணவல்லாத பொருட்களைப் பெறாத வர்களுக்கு நேற்று முன்தினம் யு.என்.எச்.சி. ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் பொருட்கள் வழங்கப்பட்டன.

இதில் J/257 தொடக்கம் J/272 வரையான கிராம சேவகர் பிரிவில் உள்ள மக்களுக்கான பொருட்கள் நீர்வேலி தெற்கு ஆர். டி.எஸ். கட்டடத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு இதன் அடுத்த கட்டமாக இன்று வெள்ளிக்கிழமை மேலும் ஒரு தொகுதியினருக்கு இப் பொருட்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் J/273 தொடக்கம் J/284 வரையான கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியேறியோரில் இது வரை கிடைக்காதோருக்கே வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆவரங்காலில் சிவன் கோயில் முன்பாக வழங்கப்படவுள்ள இப் பொருள் விநியோகத்தில் நேற்று முன்தினம் உணவல்லாத பொருட்களைப் பெறாதவர்களும் இத் தினத்தில் பொருட்களைத் தவறாது பெற்றுக் கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலகத்தினர் கேட்டுள்ளனர். (2)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் க.பொ.த.சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் என்ற விடயம் பற்றிய கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் குறித்த விடயம் பற்றி ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கருத்துரை வழங்கவுள்ளார்.(6-4)

## மனைப்பொருளியல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

மகிழ்ச்சிகரமாக மனைப் பொருட்களை திட்டமிட்டு அலங்கரித்தல் எனும் விடயம் தொடர்பான மனைப்பொருளியல் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செயலமர்வில் யாழ்.வலய கல்வி அலுவலக ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (30-2)

## விவசாயிகளின் கவனத்திற்கு

(தனங்கிளப்பு)

மறவன்புலோ விவசாய சம்மேளத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் சிறுதானிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள் நாளையும் நாளை மறுதினமும் மறவன்புலோ கிராம சேவையாளர் பிரிவில் குடும்ப அட்டையுடன் வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு மறவன்புலோ விவசாய சம்மேளனத்தின் தலைவர் சி.சிதம்பரநாதன் அறிவித்துள்ளார். (4-37)

யாழ். செய்திகள்

## முன்பள்ளி, பகல் பராமரிப்பு நிலையத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

"சிறுவர் உலகம்" முன்பள்ளிமற்றும் பகல் பராமரிப்பு நிலையம் திறப்பு விழாஇன்று காலை 6.35 மணிமுதல் 8.05 மணி வரையுள்ள சுபவேளையில் இல.16, இரண்டாம் ஒழுங்கை பலாலிவீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6)

## உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான உதவிகள்

(யாழ்ப்பாணம்)

வன்னி முகாம்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்து மீளக்குடியமர்த்தப்பட்டு யாழ்.குடாநாட்டில் தற்போது வசிக்கும் மக்கள் அவர்களின் கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியுதவியின் கீழ் வாய்க்கால்கள், குளங்கள்,வடிகால்கள், வீதிகள் , மயானங்கள் போன்றவற்றை புனரமைப்பதற்கும் பொதுக் கிணறுகள், பற்றைகள் என்பன துப்புரவுப் பணிகளில் ஈடுபடுவதற்கும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இப்பணிகளில் ஈடுபடுவதற்கான உபகரணங்கள் குறித்த வங்கியினால் வழங்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் நீண்டகால வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு தேவையான தொழிற்பயிற்சிகள் வழங்கி வருமானத்தினை அதிகரிக்கும் நோக்கிலேயே இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-30)

## வடமராட்சி கிழக்கு மாணவர்களின் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு குடத்தனை றோ.க.த.க. பாடசாலை மாணவர்கள் டெங்கு ஒழிப்பு நிகழ்வாக பாடசாலை வளாகம், அத்துடன் பாடசாலையை அண்டிய பகுதிகளில் பாடசாலை அதிபர் தலைமையில் ஆசிரியர்கள் பங்களிப்போடு மாணவர்களால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து பாடசாலை அதிபர் தலைமையில் டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது. அம்பன் பிரதேச பொ. சு.பரிசோதகர்,வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளரும் கலந்து கருத்துக்கள் வழங்கினர்.

இதேபோன்று அம்பன் அ.மி.த.க.பாடசாலையும் டெங்குக் கட்டுப்பாட்டு நிகழ்வாக பாடசாலை வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவு மேற்கொள்ளப்பட்டது.

டெங்கு பற்றிய விழிப்புணர்வு விவரணப் படம் காண்பிக்கப்பட்டது. நிகழ்வில் அம்பன் பொது சுகாதாரப் பரிசோதகருடன், கோட்டக் கல்விப் பணிப்பாளரும் கருத்துக்களை மாணவர்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## மினிவானிலிருந்து தவறிவீழ்ந்த நடத்துநர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த மினிவானிலிருந்து தவறி வீழ்ந்த நடத்துநர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்லுண்டாய் பொம்மைவெளியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 8.10 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் காரைநகரைச் சேர்ந்த கந்தையா சண்முகம் (வயது 59) என்பவரே தலையில் பலத்த வெடிப்புக் காயங்களுக்கிலக்கானார்.

784 இலக்கமுடைய குறித்த மினிவான் பிறிதொரு மினிவானை முந்திக்கொண்டு செல்ல முற்பட்ட வேளை நடத்துநரின் ஆடையில் முள்ளுக்கம்பி சிக்கியதில் தூண் ஒன்றுடன் மோதுண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (2-30)

## இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான இலவச உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 2006 ஆம்ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிக்கு முன் உள்ளூரில் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு 2010 ஜனவரி மாதத்திற்கான இலவச உலருணவு நிவாரணம் வழங்குவதற்கு யாழ்.மாவட்ட செயலாளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் விநியோகத்திற்குரிய பொருட்களை சிவப்பு நாட்டரிசி, வெள்ளை அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகியன ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி பொருட்களுக்கான வழங்கல் கட்டளைகள் மற்றும் பொருட்களை ப.நோ.கூ. சங்கங்கள் இன்று நாவற்குழி அரச உணவுக் களஞ் சியத்தில் உள்ள பொருட்களை இன்றும் நாளை சனிக்கிழமை விநியோக நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு அரசாங்க அதிபர் அறியத் தந்துள்ளார். (6-4)

# சம்பந்தன்-பொன்சேகா உடன்படிக்கை உண்மையென நிரூபித்தால் பதவி விலகதயார்

## இ.துரைரட்ணசிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிரணி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புகுமிடையில் உடன்படிக்கை எதுவும் இல்லை. அவ்வாறு உடன்படிக்கை ஏதும் இருப்பதாக அரசாங்கம் நிரூபித்தால் பதவியிலிருந்து விலகுவதற்குத் தயார் என்று கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.துரைரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் ஜெனரல் பொன்சேகாவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் ஜெனரல் பொன்சேகாவுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் இருப்பதாக அரசாங்கத் தரப்பு பிரசாரம் செய்து வருகிறது. இந்தப் பிரசாரத்தில் எந்தவித உண்மையும் இல்லை. கூட்டமைப்புக்கும் ஜெனரல் பொன்சேகாவுக்கும் இடையில் ஒப்பந்தம் இருப்பதாக அரசாங்கம் நிரூபிக்குமானால் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து விட்டு வீடு செல்வதற்கு நான் தயாராகவுள்ளேன் என்று தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தன், எம்.பி.க்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், இமாம், தங்கேஸ்வரி, அரியநேத்திரன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (2-6)

# இன மத பேதமின்றி அனைவரும் ஒன்றிணைவோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த தசாப்தம் இளைஞர்களுக்கான தசாப்தம். அவர்களுக்காக இன, மத, பேதமின்றி சுபீட்சமான நாட்டை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி கெட்டம்பே மைதானத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் என நாட்டின் சகல பகுதிகளிலும் நாம் அமோக வெற்றிபெறுவது உறுதி. வெற்றியைத் தொடர்ந்து எதிர்வரும் 27ஆம் திகதி நாட்டைக் கட்டியெழுப்பும் பணியை அனைவரும் ஒன்றிணைந்து ஆரம்பிப்போம்.

சரத் பொன்சேகா -சம்பந்தனுக்கிடையிலான ஒப்பந்தத்தை இன்று முழு நாடும் அறியும். எதிர்வரும் 26ஆம் திகதி அது இல்லாதொழிக்கப்படும். கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டு மக்கள் இந்த நாட்டை மீட்டு ஒன்றிணைந்துத் தருமாறு என்னிடம்பாரம் கொடுத்தனர். மக்கள் எதிர்பார்ப்பை நான் முழுமையாக நிறைவேற்றினேன்.

ரணில் விக்கிரமசிங்க நாட்டைத் துண்டாடி பிரபாகரனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்று அதிகாரம் மூலம் இல்லாதொழிக்க என்னால் முடிந்தது. அப்போது ரணிலுடன் மனோகணேசன், ரவூப்ஹக்கீம் போன்றோரும் இருந்தனர்.

புலிகள் முப்படைகளுடன் நிர்வாகம் செய்த காலம் அது .அவர்களுக்கென தனியான அடையாள அட்டை நடைமுறையில் இருந்தது. அத்தகையவர்களிடமிருந்தே நாம் நாட்டை மீட்டோம்.

நாட்டை மீட்டது மட்டுமன்றி நாட்டின் சகல பகுதிகளிலும் அபிவிருத்தியை மேற்கொண்டோம். துறைமுகங்கள், மின் உற்பத்தித் திட்டங்கள், வீதிகள், பாலங்கள், மேம்பாலங்கள் என பல்துறை அபிவிருத்திகளை முன்னெடுத்துள்ளோம் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (2-6)

# ஹெரி ஜயவர்த்தன இரகசியமான முறையில் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவு ?

(கொழும்பு)

இலங்கையின் பெரும் குபேரர்களில் ஒருவரான ஹெரி ஜயவர்தன அரசாங்கத்துக்கு எதிரான சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய் மாலை 4 மணியளவில் ஹெரி ஜயவர்தன கொள்ளுப்பிட்டியில் வசிக்கும் மேல் மாகாண சபை உறுப்பினரான ஏ. ஜே.எம். முஸம்மிலின் இல்லத்துக்கு வருகை தந்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திக்கும் நோக்கில் அவர் அங்கு வந்திருக்கலாமெனத் தெரியவந்துள்ளது. இம்மூவரும் அங்கு சமகால அரசியல் நிலை வரங்கள் பற்றி விசேட கலந்துரையாடல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அப்பலோ ஆஸ்பத்திரி ஆகியவற்றின் உரிமையாளராகவிருந்த ஹெரி ஜயவர்த்தனவுடன் நடைபெற்ற இக் கலந்துரையாடல் அரசியல் ரீதியில் அதி முக்கியத்துவமிக்கது என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

முக்கியமாக அவரிடமிருந்து காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் அப்பலோ ஆஸ்பத்திரியும் கைநழுவிப்போகக் காரணம் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா வழங்கிய தீர்ப்பேயாகும்.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் இந்த காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மோசடியாக ஹெரி ஜயவர்தனவுக்கு விற்பனை செய்யப்பட்டதை எதிர்த்து நிஹால் ஸ்ரீ அமரசேகர என்பவர் வழக்குத் தொடர்ந்தார்.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவும் நிஹால் ஸ்ரீஅமரசேகரவும் இப்போது ஜனாதிபதி அபேட்சகர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் ஹெரி ஜயவர்தனவும் இரகசியமான முறையில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பது இந்த இரகசியச் சந்திப்பின் மூலம் உறுதியாகியுள்ளதாக தகவல் அறிந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சந்திப்பின் நோக்கம் காப்புறுதிக் கூட்டுத்தானத்தையும் அப்பலோ ஆஸ்பத்திரியையும் மீண்டும் ஹெரி ஜயவர்த்தனவுக்கு ஒப்படைப்பதற்காக இருக்கலாமென கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக மிகப்பெரும் தொகை நிதியை ஹெரி ஜயவர்தன வழங்கியிருக்கலாமென்ற பெரும் சந்தேகம் எழுந்துள்ளது. மேலும் ஹெரி ஜயவர்தன முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டனின் தனிப்பட்ட நண்பராவர். பில்கிளிண்டன் நிறுவனத்தில் ஹெரி ஜயவர்த்தனவின் மகள் பணியாற்றுகிறார்.

கடந்த காலங்களில் ஹிலாரி கிளிண்டன் இலங்கை தொடர்பில் சுமத்திய பாரதூரமன குற்றச்சாட்டுக்களின் பின்னணியில் இருந்தவர் யார் என்பது பற்றி ஆராய இது புதிய பாதையொன்றைத் திறந்துள்ளது.

அப்பலோ ஆஸ்பத்திரியை கோத்தபாய ராஜபக்ஷ விலைகொடுத்து வாங்கினார் என்று சுமத்தப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுக் கூட இவர்களின் தேவைகளுக்காகவே உருவாக் கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# மன்னாரில் 85ஆயிரத்து 322 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்

## தேர்தல் திணைக்களம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலின் போது 85ஆயிரத்து 322 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருப்பதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன் போது 14ஆயிரத்து 925 வாக்காளர்கள் இடம்பெயர்ந்து புத்தளம், கொழும்பு, களுத்துறை மற்றும் குருநாகல் போன்ற மாவட்டங்களில் வசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வாக்காளர்களில் 679 வாக்காளர்கள் மரணமடைந்திருப்பதாகவும் 2 ஆயிரத்து 222 வாக்காளர்கள் தற்போது வெளிநாடுகளில் வசித்துவருவதாகவும் தெரியவந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்டு இம் மாவட்டத்திலேயே இடம்பெயர்ந்துள்ள 679 பேர் குறித்த பிர தேசங்களில் வாக்களிக்க தேர்தல் திணைக் களம் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் 68 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவற்றை விட இரண்டு வாக்களிப்பு நிலையங்கள் இடம்பெயர்ந்த வாக்களார்களின் நலனுக்காக மன்/அல் அஸ்கார் மகாவித்தியாலயத்திலும் நானாட்டான் பாடசாலையிலும் அமைக்கப்படவுள்ளன. (2-6)

# கப்டன் அஜித் பொயகொட பொன்சேகாவுக்கு ஆதரவு

(கொழும்பு)

தாக்குதல் ஒன்றில் போர்க்கைதியாக விடுதலைப்புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு பின்னர் 2002 ஆம்ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டை தொடர்ந்து விடுதலை செய்யப்பட்ட இலங்கை கடற்படை கப்டன் அஜித் பொயகொட எதிர்வரும்வாரம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தனது ஆதரவுகளை பொன்சேகாவுக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


1994 ஆம்ஆண்டு கற்பிட்டி கடல் பகுதியில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்ட சக்கரவர்த்தனா என்ற கட்டளைக் கப்பல் மீது கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது சிறைப்பிடிக்கப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட இலங்கை கடற்படையைச்சேர்ந்த கப்டன் பொயகொட ஜனாதிபதி தேர்தலில் தனது ஆதரவுகளை பொன்சேகாவுக்கு வழங்கியுள்ளார்.

இதற்கமைய நேற்று முன்தினம் கொட்டாஞ்சேனை பகுதியில் நடைபெற்ற பொன்சேகாவின் தேர்தல் பிரசார மேடைக்குச் சென்ற அவர் தனதுஆதரவுகளை தெரிவித்துள்ளதாக தெரிகிறது. (2-6)



# தேர்தல் ஆச்சரியமான பெறுபேறை தரக்கூடும்

## பேராசிரியர் பிரம்மா செல்லானி



இலங்கையில் எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கதாநாயகர்கள் வெற்றி பெற்றாலும் யுத்தத்தினால் சின்னா பின்ன மடைந்திருக்கும் நாட்டில் நீடித்த சமாதானத்தையும் ஸ்திரத்தன்மையையும் கட்டியெழுப்புவதற்கு தேசிய நல்லிணக்கம் மற்றும் ஆற்றுப்படுத்தலுக்கான இதய சுத்தியுடனான நடவடிக்கைகளே தேவைப்படுகின்றது.

நாட்டின் எதிர்காலம் இவற்றிலேயே தங்கியுள்ளது என்று இந்திய தேசிய பாதுகாப்புச் சபையின் முன்னாள் உறுப்பினரும் புதுடில்லியிலுள்ள கொள்கை ஆய்வு நிலையத்தின் கேந்திராபாயக் கற்றைகளுக்கான பேராசிரியருமான பிரம்மா செல்லானி தெரிவித்துள்ளார்.

கார்டியன் பத்திரிகையில் *சமாதானத்தில் தோல்வியடைந்த இலங்கையின் போர்க் குதிரைகள்* என்ற தலைப்பில் அவரின் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

அதன் சாராம்சம் வருமாறு,

புலிகளுக்கு எதிராக இடம்பெற்ற இலங்கையின் நீண்டதும் கொடூரமானதுமான உள் நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி மற்றும் இராணுவத்தளபதி என்ற ரீதியில் உதவியவர்களும் கொண்டாடப்படும் கதாநாயகர்களுமான இருவரும் இப்போது அரசியல் வாள்களை ஏந்தியுள்ளனர்.

தேர்தலில் எவர் வெற்றிபெற்றாலும் நாட்டை அடிப்படைத் தன்மையிலிருந்தும் வேறுபட்ட பாதையில் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இன ரீதியான மீள் நல்லிணக்கம் அதிகாரப்பகிர்வு ஊடாக சமாதானத்தை உருவாக்கும் பாதையில் வெற்றிபெறுபவர்கள் செல்ல வேண்டியுள்ளது.

கிட்டத்தட்ட இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் தற்போதைய சனத்தொகையான 2 கோடி 13 இலட்சத்தில் 12 சதவீதமாக இருக்கும் தமிழர்களுக்கும் இடையில் கடும் பகை நீடித்து வருகிறது.

இப்போது இரு சிங்கள கதாநாயகர்களுக்கிடையிலான அரசியல் பகைமையினால் நாடு பிளவுபட்டுக் கொண்டிருக்கிறது. புலிகளை ஒழித்த உண்மையான தலைவர் எவரென நினைவுக்கூரப்பட வேண்டுமென இவர்கள் ஒவ்வொருவரும் விரும்புகின்றனர்.

சிங்களத் தேசியவாத துப்புச் சீட்டை வைத்துக்கொண்டு இப்போது இருவரும் விளையாடுகின்றனர். அதேசமயம் சிறுபான்மைத் தமிழ் மக்களையும் வசப்படுத்த முயற்சிகின்றனர். ஆனால் இலங்கை எதிர்நோக்கியிருக்கும் பாரதூரமான பொருளாதார அரசியல் ரீதியான சவால்கள் நிழல் கவிழ்ந்ததாகியுள்ளது.

நலிவடைந்திருக்கும் நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் வெளிநாட்டுக் கடனிலேயே தங்கியிருக்கின்றது. வெளிநாட்டுக் கடன் உதவி தொடர்பாக அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. அதாவது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை விசாரணை



நடத்தப்பட வேண்டுமென அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

ஏற்கனவே பெரியதாக இருக்கும் இராணுவத்தை மேலும் விஸ்தரிப்பதற்காக அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானமானது சமாதான அனுகூலம் எவ்வாறு நழுவிச் செல்கின்றது என்பதைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது. இலங்கையின் இராணுவப்பலமானது பிரிட்டன், இஸ்ரேலின் இராணுவத்திலும் பாக்கப் பெரியதாகும்.

1980 களின் பின்னர் 5 மடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இன்று 2 இலட்சத்துக்கும் அதிகமான துருப்புக்கள் உள்ளன. *உள் மட்டக் கண்காணிப்பு* என்ற பெயரில் வெற்றியின் பின் அந்தப் பலம் மேலும் அதிகரிக்கப்படுள்ளது.

கிராம மட்ட இராணுவத்தின் ஆதரவுடன் பாரியளவு இராணுவ இயந்திரம் செயற்படுவதால் சிவில் சமூகமே பிரதானமாகப் பாதிக்கப்படுவார்கள். அவசரகால விதிகள் நடைமுறையில் தொடர்ந்தும் இருக்கையில் தேடுதல், கைது, உடைமைகளை முடக்குதல் போன்ற அதிகளவு அதிகாரங்களும் படையினருக்கு உள்ளன.

யுத்தத்தின் போது பெற்றுக்கொண்ட விசேட அதிகாரங்களைக் கையளிக்குமாறு இப்போது அரசுக்குக் கோரிக்கைகள் அதிகரித்துள்ளன. ஜனாதிபதிக்குள் நிறைவேற்று அதிகாரங்களை இல்லாமல் செய்யப் போவதாக பொன்சேகா உறுதியளித்திருக்கிறார்.

ராஜபக்ஷவும் தனது பங்கிற்கு வட பகுதிக்கான பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளதுடன் முகாம்களையும் திறந்து விட்டுள்ளார். இப்போது ஒரு இலட்சம் பேர் வரையிலேயே அகதி முகாம்களில் உள்ளனர்.

நாட்டின் முக்கியமான சவாலைக்கையாளப்போவதாக இரு பிரதான வேட்பாளர்களும் உறுதியளித்துள்ளனர். ஆயினும் மாகாணம் தொடர்பானதும் உள் மட்ட சுயாட்சியை வழங்குவதுமான சமஷ்டி முறைக்கு நாட்டின் ஒற்றையாட்சியைக் கொண்டு செல்வதாக இரு பிரதான வேட்பாளர்களும் உறுதியளிக்கவில்லை.

மேலும் தனியொரு இன தேசிய அடையாளத்திற்கான நகர்வுகள் சுதந்திரத்திற்குப் பின்னர் முன்னெடுக்கப்பட்ட விவகாரங்களே உள் நாட்டு யுத்தத்தைத் தீவிரப்படுத்தியிருந்தது.

1956 இல் மேற்கொள்ளப்பட்ட *சிங்களம் மட்டும்* மொழிக் கொள்கையும் 1972 அரசியலமைப்பில் சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்சத்தைத் தடுப்பது இல்லாமல் செய்யப்பட்டதும் தனியொரு இன தேசிய அடையாளத்துவத்திற்கான நகர்வைச் சிறப்பாக எடுத்துக் காட்டிருயிருந்தது.

அரச இயந்திரத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நிலையிலும் ஊடக ஆதரவுடனும் பதவியிலிருக்கும் ராஜபக்ஷ தேர்தலில் அனுகூலம் பெற்ற நிலையில் உள்ளார். ஆனால் எதிரணியும் மிதவாத தமிழ்க் கட்சியும் பொன்சேகாவுக்கு ஆதரவாக இருப்பதால் தேர்தல் ஆச்சரியமான பெறுபேறை ஏற்படுத்தக்கூடும். (2-6)

## வாக்குப் பெட்டிகளில் சிறப்பு அடையாள ஸ்ரிக்கர்கள்

### முறைகேடுகளை தவிர்ப்பதற்கான ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலின் போது வாக்கு பெட்டி முறைகேடுகளை தவிர்ப்பதற்காக வாக்கு பெட்டிகளில் சிறப்பு அடையாளங்களை பொறிப்பதற்கு தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஜனாதிபதி தேர்தலின் போது வாக்கு பெட்டிகள் கைமாறப்படுவதை தவிர்ப்பதற்கு வாக்குப் பெட்டிகளில் சிறப்பு அடையாளங்களை ஏற்படுத்த ஆணையாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் இந்த அடையாளங்களையுடைய ஸ்ரிக்கர்கள் வாக்குநிலையங்களை சேர்ந்த அதிகாரிகளுக்கு வாக்களிப்பு நாளன்று அதிகாலையே விநியோகம் செய்யப்படும் எனவும் அதற்கு தேவையான ஸ்ரிக்கர்கள் ஏற்கனவே தயார்படுத்தப்பட்டு விட்டதாகவும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (2-6)



உரும்பிராய் கிழக்கு காந்திஜீ சனசமூகநிலைய முன்பள்ளி சிறுவர்களின் கௌரவிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சட்டத்தரணி மு.றெமிடியாஸ் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு பிரிவுத் தலைவர் இ.மயில்வாகனம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## ஜனாதிபதிக்கு பாதகமானவற்றை சோதிடர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரசாரத்தின் பிரதான தொனிப் பொருளான சுபீட்சமான எதிர்காலம் என்றவார்த்தையில் சோதிட ரீதியான குறைபாடுகள் இருப்பதன் காரணமாக ஜனாதிபதிக்கு நற்பலன் இல்லை எனவும் இந்த நிலைமையில் அந்த வார்த்தையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு பிரபல சோதிடர்கள் சிலர் பசில் ராஜபக்ஷவிற்கு அறிவித்துள்ளதாக அலரி மாளிகைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் போர் முடிவடைந்த பின்னர் மணித்தியாலயத்திற்கு மணித்தியாலயம் ஒளிபரப்பாகிய மகாராஜா என்ற பாடலும் பாதிப்பான பலன்களை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என ஜனாதிபதிக்கு நெருக்கமான பிக்கு ஒருவர் தெரிவித்திருந்ததுடன் அந்தப் பாடல் ஒளிபரப்புவதை நிறுத்துமாறும் அறிவித்திருந்தார்.

எனினும், குறித்த பாடலைப் பாடிய பாடகி சகோலி கமகே குறித்து சந்தேகம் கொண்ட ஜனாதிபதியின் பாரியார் அந்தப் பாடலை ஒளிபரப்புவதை நிறுத்தியதாக தெரிவிக்கப் படுகிறது. (2-6)

## நல்லூர் புராதன மந்திரிமனையருகே த.தே.கூட்டமைப்பின் பிரசார கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடத்தப்படும் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நலலூர் திவ்விய ஜீவன மண்டபத்திற்கு முன்பாக உள்ள புராதன மந்திரிமனைக்கு அருகில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பலர் இதில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-4)


சமத்துவம்
நிலைக்க...
அமைதிச் சூழலுக்கு நாட்டைக் கொண்டுவந்த அவருடைய அடுத்த இலக்கு அமைதியும் சமத்துவமும் சுபிட்சமும் சுதந்திரமும் உள்ள உன்னத நாடு.
தமிழ்பேசும் உறவுகளே!
நம்மை அவர் என்றுமே சிறுபான்மை இனமாகவோ இரண்டாந்தரப் பிரஜைகளாகவோ எண்ணியதில்லை. இந்த நாட்டின் சகலவற்றிலும் சமத்துவ அந்தஸ்துடைய தேசிய இனங்களாகவே அவர் கணிக்கிறார். அதனை நிருபணமாக்க நமது அந்தஸ்தை, சமத்துவத்தை அரசியல் ரீதியாக நிலைப்படுத்த எமது ஆணையை வேண்டுகிறார்.
தேசத்தின் அடுத்த ஜனாதிபதியும் அவராகவே இருந்து எமது சமத்துவமான, சமாதான வாழ்வை சாதித்துப்பெற நமது வாக்குகளை அவருக்கே வழங்குவோம்.
அமைதி
அபிவிருத்தி
சமத்துவம்
சுதந்திரம்
புனரமைக்கப்படும் உன்னிச்சைக் குளம்
தொண்டமனாறு தடுப்பணை
கிழக்கின் வீட்டுத்திட்டம்
எங்கள் தெரிவு
மஹிந்த ராஜபக்ஷ
தமிழர்தம் வாழ்வில் வீசட்டும் வசந்தம்

# நஷ்ட ஈடு கோரும் முன்னாள் கடற்படை அதிகாரி

(கொழும்பு)

முன்னாள் கடற்படை அதிகாரி சரத் பி. வீரசேகர பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவிடமிருந்து 500 மில்லியன் ரூபாவை நஷ்ட ஈடாக கோரியுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது,

2005 ஆம் ஆண்டு தான் பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கு முன் சிவில் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அக்காலப் பகுதியில் சிவில் பாதுகாப்புப் படையணியை வலிமை வாய்ந்த படையணியாக மாற்றியமைத்து அதன்மூலமாக புலிப் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்குள்ளாகக் கூடிய நிலங்களைப் பாதுகாத்து அவர்களைத் தோற்கடித்ததாகவும் தெரிவித்துள்ள அவர் தற்போது தனது பெயருக்கும் பதவிக்கும் களங்கம் ஏற்படுத்து முகமாக பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்தமாதம் கொழும்பு ராஜகீய மாவத்தையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் மங்கள சமரவீர பேசுகையில்,

சிவில் பாதுகாப்புப் படையணியின் சேனாபதி நிதியத்திலிருந்து ரூபா 1500 மில்லியன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தப்பட்டது என தெரிவித்தமையானது தனது பெயருக்கும், பதவிக்கும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இக்குற்றச்சாட்டை அவர் முற்றாக மறுத்ததுடன் ரூ.500 மில்லியன் மான நஷ்டமாக கோரியுள்ளார். மேற்படி விபரங்களை சரத் பி. வீரசேகர தனது சட்டத்தரணிமூலம் தெரியப்படுத்தியுள்ளார். (6-4)

# — குண்டும் குழியுமாக — யாழ்.நகர் ஐந்துசந்தி வீதி

(பொன்னாலை)

யாழ்.நகர் ஐந்துசந்தி வீதி மிகவும் சேதமடைந்துள்ளதுடன் இவ்வீதியூடாக போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மேற்படி வீதியானது குன்றும் குழியுமாக தோற்றமளிப்பதுடன் வீதியில் கற்களும் வெளிக்கிளம்பி ஆங்காங்கே சிறுசிறு குவியல்களாகக் காணப்படுகின்றது.

இதனால் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் அனைத்து வாகன ஓட்டிகளும் பெரும் சிரமத்தை எதிர் கொண்டுள்ளதுடன் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அத்துடன் இவ் வீதியால் பயணம் செய்யும் பாதசாரிகள் கூட பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து வீதியை திருத்தி சௌகரியமான போக்குவரத்துக்கு ஆவன செய்யுமாறு மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (6-4)

# ஐக்கிய அமெரிக்காவில் குடியேற ஆறு இலங்கையருக்கு அனுமதி

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த ஆறு பேருக்கு ஐக்கிய அமெரிக்காவில் குடியேறி வாழ்வதற்கான அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வேர்ஜின் தீவில் பாஸ்லம் கட் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு பேருக்கே இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் அனைவரும் ஐக்கிய அமெரிக்காவிற்கு செல்வதற்காக கடல் மார்க்கமாகச் சென்ற போதும், வேர்ஜின் தீவுக்கு அருகில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

அங்கு அவர்கள் மேற்கொண்டிருந்த உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை அடுத்து, துரித நடவடிக்கை எடுத்த சிறைச்சாலை அதிகாரிகள், அவர்களை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவைக்கு அகதி அந்தஸ்தை உறுதிப்படுத்துவதற்காக அனுப்பி வைத்தனர்.

மேலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர், அவர்கள் தமக்கு பாதுகாப்பான நாடு என கருதும் நாடொன்றில் குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் குறிப்பிட்ட இலங்கையர் அனைவரும் அமெரிக்காவில் குடியமர சம்மதம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# பாரிய தோல்வியில் அரசாங்கம்

## லயனல் போபகே தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கம் பாரிய தோல்வியைச் சந்திக்கவுள்ளது. அந்தத் தோல்வியை ஜீரணிக்கமுடியாத அரசாங்கம் தானே வன்முறையை கையிலெடுத்துக் கொண்டு எதிர்க்கட்சிகளை வன்முறைக் கலாசாரத்துள் தள்ளி விட்டுவிட்டு தன்னை ஜனநாயகவாதியாகக் காட்டும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

ஆனால் அது என்ன முகமூடியை போட்டுக்கொண்டாலும் தோல்வியைச் சந்திப்பது உறுதியென ஜே.வி.பியின் ஆரம்பகால உறுப்பினரும் முன்னாள் பொதுச் செயலாளருமான லயனல் போபகே தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியை விட்டு விலகியிருந்த அதன் ஆரம்பகால உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஜனநாயக மக்கள் ஒன்றியம் என்ற அமைப்பினூடாக பொதுவேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவை நிபந்தனையின்றி ஆதரிக்கும் தீர்மானத்தை வெளிப்படுத்தும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் ஒன்றியத்தின் இந்த விசேட செய்தியாளர் மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை ராஜகிரியவில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றபோதே லயனல் போபகே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (2-6)

# சபரிமலை பிரசாதம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தில் சபரிமலையில் இருந்து கொண்டு வரப்பட்ட வீபூதி, பிரசாதம், நெய், பஞ்சாமிர்தம் என்பன நாளை சனிக்கிழமை வழங்கப் படவுள்ளதால் ஐயப்ப சுவாமிமார்கள், அடியார்கள் அனைவரும் வருகை தந்து இப் பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

# அரிச்சுவடி ஏடுகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

. தைப்பூசத் தினத்தன்று ஏடு தொடக்கவுள்ள பெற்றோர்கள், பாடசாலை அதிபர்கள் மில்க்வைற் சோப் தொழிற் சாலையில் அரிச் சுவடி ஏடுகளை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளுமாறு தொழிலதிபர் இ.தவகோபால் தெரிவித்துள்ளார். (6-4)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுடனான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆவரங்கால் சிவ சக்தி மண்டபத்தில் வலி வடக்கு இடம்பெயர்ந்த நிவாரண சங்கத் தலைவரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு தங்களது பிரச்சினைக்குரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ளுமாறு வலி வடக்கு இடம்பெயர்ந்த நிவாரண சங்கத்தின் தலைவர் மு.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். (6-4)

# பொன்சேகா நன்றி மறந்தவராக செயற்படுகிறார் - ஜனாதிபதி

(கொழும்பு)

எனக்கு எதிராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சரத் பொன்சேகாவை நானே முன்னேற்றினேன் ஆனால் அவர் தற்பொழுது நன்றி மறந்தவராக செயல்பட்டு வருகின்றார் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ராகலையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று என் வெற்றியை உறுதிப்படுத்திய வாறு பெருந்திரளாக தோட்டத் தொழிலாளர்கள் கூடியிருக்கின்றீர்கள். எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது . மலையக மக்களின் மறுமலர்ச்சிக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன்.

இம் மக்களின் நல்வாழ்வுக்காக பல நன்மைகள் செய்யவுள்ளோம். சிறுபான்மை என்றொரு இனம் இனி இல்லை. முப்பது வருட யுத்தம் முடிவுற்று நாடு சமாதானம் நோக்கிச் செல்கின்றது. உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களியுங்கள். இவ்வாறு அவர் கூறினார். (2-6)

# போட்டி போட்டு ஓடிய பஸ்கள் — மயிரிழையில் குடும்பஸ்தர் உயிர்தப்பினார்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவன் கோவில் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து புறப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவிற்குரிய பஸ்வண்டியும், தனியார் மினி வானொன்றும் ஒன்றினை ஒன்று முந்தும் வண்ணம் செலுத்தியதால் அவற்றின் இடையில் அகப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிர் பிழைத்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதேவேளை இரண்டு வாகனங்களிலும் 150 க்கு மேற்பட்ட பிரயாணிகள் இருந்ததாகவும் சடுதியாக பிரேக் போடப்பட்டதால் அவர்கள் அனைவரும் பெரும் பீதியடைந்ததாகவும் இவ்வாறான சம்பவங்கள் நித்தமும் தொடர்வதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மக்களின் உயிரோடு சம்பந்தமான விடயம் என்பதால் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2)


# கண்ணீர் அஞ்சலி



மனிதாபிமானப் பணியில் எம்முடன் இணைந்து பணியாற்றிய நண்பனே உம்மை, உமது பணியை என்றும் நினைவில் கொள்வோம்.

துயருற்றிருக்கும் தாய், சகோதரர்களுடன் இணைந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வன் ஆனந்தநாயகம் சுபாஸ்கரன்
(முன்னாள் ஊழியர்)

இயக்குநர், பணியாளர்கள்
கரித்தாஸ்-கியூடெக்
யாழ்ப்பாணம்.

(C-4301)


# மரதன் ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா. வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு ஆரம்ப நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆவரங்கால் சிவன் கோவிலடியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் கா. தர்மரத்தினம் கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்து வைக்கவுள்ளதாக மேற்படி வித்தியாலய அதிபர் ஜே. ஏ. தவநாயகம் தெரிவித்துள்ளார். (2-4)

# ஹெய்டியில் மீண்டும் கடுமையான நில அதிர்வு!

ஹெய்ட்டியின் தலைநகர் போர்ட் ஒவ் பிரின்ஸ் நகரில் பூகம் பத்தைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் கடுமையான நில அதிர்வு ஒன்று உணரப்பட்டுள்ளது.

இதில் உயிரிழப்பு ஏற்பட்டதாக உடனடியாக தகவல் ஏதும் இல்லை. ஆனால் 6.1 என்ற அளவில் ரிக்டர் அளவு கோலில் பதிவா கியுள்ள இதன் தாக்கத்தின் காரணமாக, பலர் தமது இருப்பிடங்களை விட்டு ஓடியதாகவும், முதல் பூகம்பத்தில் தாக்குண்டு வலுவிழந்து போயுள்ள பல கட்டடங்கள் இதில் விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் இடம்பெற்ற பூகம்பத்தால் ஏற்பட்ட இடிபாடுக ளுக்குள் சிக்கிய 21பேர் மீட்கப் பட்டுள்ளதாக ஐ.நா.கூறுகிறது.

இப் பூகம்பத்தில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# இன்று ஒரு தகவல்

## மனிதனின் பயணம்

ஒரு பெரிய நடைபாதை.

அதில் ஒரு மனிதன் தனியாக நடந்து போய்க் கொண்டிருந்தான்.

திடீரென்று பக்கத்தில் இலை, செடிகள் எல்லாம் அசைவது போல் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.

கொஞ்ச தூரத்தில் வெறிபிடித்த யானை ஒன்று அவன் இருக்கிற பக்கமாக வந்து கொண்டிருந்தது.

உடனே ஓட ஆரம்பித்தான்.

யானையும் அவனைத் துரத்த ஆரம்பித்தது.

எப்படியாவது அந்த யானையிடமிருந்து தப்பித்தாக வேண்டும். தலைதெறிக்க ஓடினான்.

ஒளிவதற்கு வசதியாக எந்த இடமும் அங்கே இல்லை.

ஒரு பாறை தெரிந்தது.

அங்கே போய்ப் பார்க்கிறான்.

அந்தப் பக்கமாக ஒரு பெரிய பள்ளம்.

வேறு வழியே இல்லை.

திரும்பிப் பார்த்தால் யானை நெருங்கி வந்து கொண்டிருந்தது.

என்ன செய்வது?

அந்தப்பாறை ஓரமாக ஒரு மரம் நின்றது.

அந்த மரத்தின் கிளை பள்ளம் இருக்கும் பக்கமாக வளைந்து நீட்டிக்கொண்டிருந்தது.

அந்தக் கிளையைப் பிடித்துத் தொங்க ஆரம்பித்தான். கீழே பார்க்கிறான். காலுக்கடியில் ஆழமான பள்ளம். மேலே பார்க்கிறான்.

மரத்தின் கிளையும் வலுவானதாக இல்லை.

எப்பொழுது முறியலாம் என்று காத்துக் கொண்டிருந்தது.

கரையில் பார்க்கிறான்.

யானை கத்திக் கொண்டு நின்றது.

கொஞ்ச நேரம் அப்படியே தொங்குகிறான். இப்பொழுது காலுக் கடியில் ஏதோ சத்தம் கேட்டது.

என்னவென்று குனிந்து பார்க்கிறான்.

ஒரு சிங்கம் எங்கேயிருந்தோ அங்கே வந்து வாயைத் திறந்து கொண்டு நின்றது.

ஆக.... கீழே குதிக்கவும் முடியாது.

இந்த சமயத்தில் தலைக்குமேல் வேறு ஒரு மாதிரியான சத்தம். என்னவென்று பார்த்தால்...

அங்கே இரண்டு எலி...அந்தக் கிளையை கொஞ்சம் கொஞ்சமாக பல்லால் சுரண்டிக் கொண்டிருந்தது.

ஒரு எலி வெள்ளையாக இருந்தது. இன்னொரு எலி கறுப்பாக இருந்தது.

எலிகள் சுரண்டும் வேகத்தைப் பார்த்தால் கூடிய சீக்கிரம் கிளை முறிந்து விழும் போல் இருந்தது.முடிவு நிச்சயம் என்று தெரிந்து போய்விட்டது.

இந்தச் சமயத்தில் அந்தக் கிளையின் இன்னொரு பக்கத்தில் ஒரு தேன்கூடு இருப்பது அவனுடைய கண்ணுக்குத் தெரிந்தது. அந்தத்தேன்கூடு அவனுடைய தலைக்கு நேராக மேலே இருந்தது.

அதிலிருந்து தேன் ஒவ்வொரு துளியாக கீழே கொட்டிக் கொண்டிருந்தது. இவன் வாயைத் திறக்கிறான்.

நாக்கில் அந்தத் தேன் வந்து விழுந்தது. ஒவ்வொரு துளியும் இன்பமாக இருந்தது.

ஆகா எவ்வளவு சுவை?

அந்தத் தேனின் இனிப்பில் – யானையை மறந்தான். சிங்கத்தை மறந்தான். எலியை மறந்தான்.

தேனின் இனிமை மற்ற எல்லா வற்றையும் மறக்க வைத்து விட்டது.

இது பெரியவர்கள் சொல்லும் ஒரு கதை சரி... அந்த மனிதன் யார் என்று கேட்டால் அது நாம் தான் என்று சொல்கிறார்கள்.

வாழ்க்கை என்ற மனிதனின் பயணத்தில் மரணம் என்னும் யானை எதிரே வந்து பயமுறுத்துகிறது.

பிரச்சினைகள் என்ற சிங்கம் பின்னால் நின்று கொண்டு பயமுறுத்துகிறது.

இதற்கிடையில் இரவும் பகலும் மாறி மாறி வந்து வாழ்நாளைக் குறைத்துக் கொண்டே வருகிறது. இரவு என்பது தான் அந்தக் கறுப்பு எலி. பகல் என்பது தான் அந்த வெள்ளை எலி. இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மனிதன் வாழ்ந்து கொண்டிரு க்கிறான்.

தேன் துளிபோல அவனுக்கு வாழ்க்கையில் எத்த னையோ மகிழ்ச்சிகள் ... சுவைகள்....

அந்த மகிழ்ச்சியின் மத்தியில் அவனுக்குக் கவலை மறந்து போகிறது. அவனுக்கு அந்த யானையின் ஞாபகமும் வருவதில்லை.

சிங்கத்தின் ஞாபகமும் வருவதில்லை.

எலிகளின் ஞாபகமும் வருவதில்லை.

மனிதனின் பயணம் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. இதைப் புரிந்து கொள்வதற்காகத்தான் இந்தக் கதை.

எதற்கும் பயப்படாமல் வாழ்க்கையைக் கொண்டாடக் கற்றுக் கொள்ளுங்கள் என்பது ஞானிகளின் அறிவுரை. இதைத் தவறா கப் புரிந்து கொள்ளும் மனிதர்களும் உண்டு.

அப்படிப்பட்ட ஒருத்தர் மதுமயக்கத்தில் உட்கார்ந்திருந்தார்.

"ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று அவருடைய நண்பர் கேட்டார்.

"வாழ்க்கையைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறேன்" என்றார் அவர்.

"வாழ்க்கைக்கு முதல் விரோதியே இந்த மதுதான். அதைப் புரிந்து கொள் என்றார்" இவர்.

இதற்கு அவர் சொன்னார்.

"அது எனக்குத் தெரியும்... இந்த மது எனக்கு விரோதி என்பது நல்லாத் தெரியும். ஆனால் நான் வேதநூல்கள் சொல்லும் படி நடக்கிறேன். அவ்வளவு தான்!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இம்முறை 10 ஆயிரம் பேர் சங்கீத பரீட்சைக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இம்முறை வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்படவுள்ள கர்நாடக சங்கீதப் பரீட்சைகளில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்துள்ளதாக மேற்படி சங்கீத சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாடசாலை விடுமுறை நாட்களில் இப்பரீட்சைகள் யாவும் இடம்பெறும் என்றும் அதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி முடிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வன்னியில் சென்ற வருடம் பரீட்சை எடுத்து பெறுபேறுகளைப் பெறாதோரின் பரீட்சை முடிவுகளையும் காரியாலத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# இலவச மூக்குக் கண்ணாடிகள் பொருட்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை நல்லூர் லயன்ஸ் கழக அனுசரணையுடன் இணைந்து நடத்தவுள்ள இலவச மூக்குக் கண்ணாடிகள் மற்றும் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு கே.கே.எஸ். வீதி கொக்குவிலில் அமைந்துள்ள சாந்தி மாலாவில் பேரவைத் தலைவர் ச. சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக நல்லூர் அரிமாக்கழகத் தலைவர் லயன் பி. பாலசங்கர், பேரவை ஆலோசகர் ஏ. இராமநாதன், யாழ். வர்த்தக சங்கத் தலைவர் லயன் ஆர். ஜெனக்குமார் மற்றும் லயன் எஸ். எம். பெனார்ந்தோ, பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் என். நகேஸ் வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் 60 வயதுக்கு மேற்பட்ட கண்ணாடி தேவையான மூத்த பிரஜைகள் கண்ணாடி தொடர்பாக டாக்டர்களின் கடிதங்களுடனும் மற்றும் கடிதங்கள் இல்லாதோருக்குக் கண் பரிசோதனை செய்தும் தகுதியான கண்ணாடிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இதற்கமைய ஏற்கனவே பேரவையின் கோரிக்கை தொடர்பாக கண்ணாடி தேவையென்று கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும் என்றும் அவர்களுக்குத் தனித்தனிக் கடிதம் அனுப்பப்படும் என்றும் அக்கடிதங்களை இந்நிகழ்விற்கு வரும்பொழுது தவறாது கொண்டு வரவேண்டும் எனவும் பேரவை செயலாளர் வ. பரமசிவம் அறிவித்துள்ளார். (4)

## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

வல்வை அருள்மிகு ஆதி வைரவர் ஆலயத்தின் பாலஸ்தாபனம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி முதல் 7.45 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இக்கிரியைகள் யாவும் பிரதம குரு சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் தலைமையில் நடைபெறவுள்ளது. (6-4)

## இலவச மாலை நேர வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சண்டிலிப்பாய் பிரிவில் ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 6 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கான மாலை நேர இலவச வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளது. குறித்த பிரிவில் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் 3ஆம் கட்டை ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள சண்டிலிப்பாய் பிரிவு காரியாலயத்தில் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் மேலதிக விபரங்களுக்கு 0215670405 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவு செயலாளர் தெரிவித்துள்ளார். (6-4)

# பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பயிற்சி பெறுவதற்கான டீசல் என்ஜின் மெக்கானிக், பெயின்ரர், ஓட்டோ எலக்ரீசியன் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் எனவும் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவராக இருக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் NAITA இல.7கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும் என மாவட்ட முகாமையாளர் கி. கிருஷ்ணபாலன் தெரிவித்துள்ளார். (6-4)

# இராசி பலன்

*22-01-2010*
*(தை 09 வெள்ளிக்கிழமை)*
*சப்தமி முன்னிரவு 11.59 மணிவரை*
*ரேவதி முன்னிரவு 7.11 மணிவரை*
*இராகுகாலம் 11.05-12.35 மணிவரை*
*சுபநேரம் 6.35 - 8.05 மணிவரை*
*ரத சப்தமி, அமிர்தம்*

| | |
|---|---|
| மேடம் | சுபகாரியச் செலவு, சயன சுகக்குறைவு, தந்தை வழி உறவு, உணர்ச்சி வசப்படல் |
| இடபம் | தெய்வ தரிசனம், தடைப்பட்ட காரியம் கைகூடும், தனதானிய சேர்க்கை, உற்சாகம் |
| மிதுனம் | சுபநிகழ்வு, அதிக பிரயாசை, தெய்வ தரிசனம், இனிய செய்தி |
| கடகம் | தொழில் ஆர்வம், பிரயாணம், பிதா சிந்தை, கட்டுப்பாடு |
| சிங்கம் | போசன சுகம், வீண்தொல்லை, பணக்குறைவு, தெய்வ சிந்தை |
| கன்னி | சென்ற இடத்தில் செல்வாக்கு, தேகநலன், காரிய அனுகூலம், தெய்வ தரிசனம் |
| துலாம் | சுகவாழ்வு, பணவருவாய், பகைவரால் நன்மை, முயற்சி கைகூடும் |
| விருச்சிகம் | வியாபார விருத்தி, பெரியோர் உதவி, தெய்வ தரிசனம், போசன சுகம் |
| தனுசு | பயந்த சுபாவம், புதிய தகவல், மாதா சுகம், ஆரோக்கியக் குறைவு |
| மகரம் | அந்நியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, விருந்துபசாரம், தெய்வ தரிசனம் |
| கும்பம் | சயனசுகக்குறைவு, தனவிரயம், குடும்பக் கவலை, முயற்சி தாமதம் |
| மீனம் | தெய்வ தரிசனம், நல்ல சம்பவம், கலந்துரையாடல், தேகநலன் |

வளவன்


# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 |
| தக்காளி | 110 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 50 |
| கோவா | 80 | 90 | 90 |
| கரட் | 140 | 150 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 100 | 110 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 160 | 180 | 150 |
| வெண்டிக்காய் | 170 | 180 | 70 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 150 | 160 | 150 |
| லீக்ஸ் | 120 | 130 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | -- |
| கறிமிளகாய் | -- | -- | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 100 | 110 | 120 |
| கத்தரி தம்புள்ள | 100 | 110 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 35 |
| தேசிக்காய் | 80 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# விஜயநகர காலத்து ஓவியங்கள்

109


சடையிலிருந்த கங்கை நிலை தளர்ந்து விட்டதால் மீன்கள் அங்குமிங்குமாக விழுந்து ஓடுகின்ற காட்சி தெரிகின்றது. தாண்டவத்தினுடைய அதீதமான வேகத்தினாலேயே முயலகன் மேல் ஊன்றிய பாதம் நிலை மாறிய கோலந்தெரிகின்றது. இது அற்புதக் கோலத்தை கலம் ஒன்றிலே தாமரைமலர் ஏந்திய கோலத்திற் சிவகாமசுந்தரி நின்ற நிலையிலே வியப்புடன் பார்க்குங் காட்சி அமைந்திருக்கின்றது.பிரமன் தாளம் போட விஷ்ணு மிருதங்கத்தை ஒலிக்கின்றார்.



தேவர்களில் ஒருவர் பக்கத்திலே நின்று பஞ்சகமுக வாத்தியத்தை ஒலிக்கின்ற கோலம் அமைந்திருக்கின்றது. ரிஷிகளும் வானவர்களும் விண்ணிலிருந்து இந்த அற்புதக் காட்சியைக் கண்டு களிப்புறுகின்றனர்.

வேறொரு ஓவியத்தில் வாமனர்களான கணத்தவர்களோடு பிக்ஷாடனர் வடிவிலே சிவபெருமான் சென்று ரிஷிபத்தினிகளிடம் இருந்து உணவு பெறுங் காட்சி வரையப் பெற்றுள்ளது. இன்னொரு காட்சியிலே ரதி – மன்மதன் ஆகியோரி உருவங்கள் அமைந்திருக்கின்றன. ரதி அன்னத்தின் மேல் இருக்கும் காட்சி வரையப்பெற்றுள்ளது. மன்மதன் கிளிகளினால் இழுக்கப்படும் தேரிலே ஆலீடமான கோலத்தில் இருந்த வண்ணமாக மலரம்புகளைக் கரும்பு வில்லினால் எய்கின்ற காட்சி காணப்படுகின்றது. யௌவனமான நடனக்காரர் சகிதம் ரதி காணப்படுகின்றாள்.

ஒரு சித்திரத்திலே விஷ்ணு அனுக்கிரக மூர்த்தியின் உருவம் வரையப்பெற்றுள்ளது. அதிலே சிவனும் பார்வதியும் இடபவாகனத்தில் அமர்ந்த கோலத்தில் உள்ளனர். அவர்களை வழிபடும் திருமாலுக்கு சிவபெருமான் அருள் புரியங் காட்சி தெரிகின்றது. இன்னும் ஒரு சித்திரத்திலே குமாரக்கடவுள் பிரமனுக்குப் பிரணவ மந்திரம் பற்றி விளக்கிய காட்சி அமைந்திருக்கின்றது.பிரமனும் ரிஷிகளும் கூடி இருக்கும் சபையிலே அவர்களை நோக்கிய வண்ணம் சிவனும் பார்வதியும் வீற்றிருக்கின்றனர். சிவனுடைய கரம் ஒன்று சின்முத்திரையுடன் காணப்படுகின்றது. அது ஞானோபதேசத்தின் அறிகுறியாகும். சபையோர் முன்னிலையிற் பாலகன் ஒருவரின்



கோலந் தெரிகின்றது. அது பிரமனுக்கு ஞானோபதேசம் செய்த குமாரக் கடவுளின் தோற்றமாகும். குமாரக் கடவுளின் சக்தியானது இறைவனையே வியப்பில் ஆழ்த்திவிட்டது. குமாரக் கடவுள் ஞானவடிவம் என்பதால் அவரைக் குருமூர்த்தி என்றும் ஞான சாஸ்தா என்றுங் கொள்வாராயினர். இந்தக் காட்சி அற்புதக் கோலமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. வேறொரு காட்சியிற் சிவனை நோக்கிப் பெரியதோர் கூட்டம் அணிவகுத்துச் செல்லுங் கோலந் தெரிகின்றது. பிருங்கி முனிவர், நந்திகேஸ்வரர், விஷ்ணு, பிரமன், இந்திரன் முதலானோர் அக்கூட்டத்தில் காணப்படுகின்றனர்.

இந்திரனுடைய உடல் முழுவதும் கண்கள் போன்ற உருவங்கள் தெரிகின்றன. இந்திரனுக்கு ஆயிரங்கண்கள் உண்டு என்பது புராணக்கதை. இவற்றைப் போன்ற, பௌராணிக சாரமான வேறும் பல ஓவி யங்கள் இங்கே காணப்படுகின்றன.

## 5. திருவண்ணாமலை ஓவியங்கள்

விஜயநகரப் பேரரசர் காலத்து ஓவியங்கள் சில திருவண்ணாமலைக் கோபுரத்திலும் மண்டபமொன்றிலுங் காணப்படுகின்றன. திருவண்ணாமலையிலுள்ள இராயகோபுரம் பதினொரு நிலைகளைக் கொண்ட பேரமைப்பர்கக் கிருஷ்ணதேவராயரின் ஆட்சியிற் செல்ல்ப்ப நாயக்கரால் அமைக்கப்பட்டது. அதன் விதானத்திலே கஜவேட்டைக் காட்சியொன்று சித்திரக் கோலமாக விளங்குகின்றது. விஜயநகர மன்னர்களின் பிரஸஸ்திகள் ராயர்கள் கஜவேட்டை கண்டருளியிமையினை அவர்களின் சிறப்பிற்குரிய சாதனைகளில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றது. பெரிய வேளமொன்றை வீரர்களான இருவர் பிடிக்கும் காட்சி இங்கு காணப்படுகின்றது. அதனைச் சுற்றி மற்றுமோர் ஓவியம் காணப்படுகின்றது. அதிலே நாட்டியப் பெண்களின் வடிவங்கள் சித்திரமாக வரையப்பட்டுள்ளன. நடனத்தைக் கண்டு இரசிக்கும் முடிதரித்த ஆண்மகன் ஒருவனின் உருவமும் அழகான கோலத்தில் அமைந்துள்ளது.


திருவண்ணாமலையில் எழுந்த மண்டபத்திலும் பல சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன. அம் மண்டபம் கோயிலின் பின்புறமாக மலையின் அடிவாரத்தைச் சுற்றி அமைந்திருக்கின்றது. அதன் விதானத்தில் நான்கு வெவ்வேறான கதைகள் சித்திரக் கோலமாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிலொன்று பார்வதி பரமேஸ்வரரின் திருக்கல்யாண வைபவமாகும். இரண்டாவது சித்திரம் இராமாயணக் கதையின் அம்சமொன்றினை விளக்கும் காட்சியாக அமைந்திருக்கின்றது. மற்றொன்று ஆயர்குலக் கன்னியொருத்தியும் கோபாலனொருவனுங் கூடிக் குலாவிக் குதூகலிக்கும் காட்சியின் கோலமாகும். நான்காவது ஓவியம் வள்ளி திருமணம் பற்றிய கதையின் சித்திரக் கோலமாய் அமைந்துள்ளது.

## 6. திருவரங்கம்

விஜயநகர காலத்தின் முற்பகுதியில் வரையப்பெற்ற ஓவியங்கள் சில திருவரங்கநாதர் ஆலயத்து வேணுகோபாலர் சன்னதிக்கு முன்னால் அமைந்துள்ள மண்டபம் ஒன்றின் விதானத்திற் காணப்படுகின்றன. கோகுலப் பெண்களும் ஆனிரைகளும் சூழ்ந்து நிற்க, கிருஷ்ணன் புல்லாங்குழல் இசைக்கும் காட்சி இங்கு வரையப் பெற்றுள்ளது. கோகுலப் பெண்களின் உருவங்கள் மிகுதியான ஆபரணங்களுடன் அமைந்திரு க்கின்றன. அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகள் அழகிய சித்திர வேலைப்பாடுகள் பொருந்தியவை.

## 7. திருவீழிமிழலைச் சித்திரங்கள்

நாயன்மார்களின் பாடல்பெற்ற உத்தம தலங்களில் ஒன்றான திருவீழிமிழலையிலே 15 ஆம்,16 ஆம் நூற்றாண்டுகளில் வரையப் பெற்ற ஓவியங்கள் சில காணப்படுகினறன. கோயிலின் கட்டுமானங்கள் சோழப் பேரரசர் காலத்தவை என்பதை அங்குள்ள சாசனங்கள் மூலமாகவும் சிற்பங்களின் கலைப் பண்புகளினாலும் அறிந்துகொள்ளலாம். அங்கு 11 ஆம் நூற்றாண்டளவில் அமைக்கப்பட்ட மண்டபம் ஒன்றிலே குழலூதும் கண்ணனின் கோலமும் காளிங்கநர்த்தனக் கோலமும் சித்திரக்காட்சிகளாய் அமைந்துள்ளன. வேணுகோபாலின் சித்திரத்திலே கண்ணனின் குழலோசையினாற் கவரப்பட்டுப் பரவசமாகி மெய்மறந்து நிற்கும் கோபியரின் கோலம் வனப்பு மிகுந்த காட்சியாக வரையப்பட்டுள்ளது. காளிங்கநர்த்தனனின் இருமருங்கிலும் ருக்மணி, சத்தியபாமா ஆகியோரதும் கொடிப் பெண்கள் இருவரினதும் வனப்பு மிக்க வடிவங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் 15 ஆம் நூற்றாண்டில், விருப்பண்ண உடையாரின் காலத்தில் வரையப்பட்டவை என்று சிலர் கருதுவர். விருப்பண்ண உடையார் இக் கோயிலுக்கு வழங்



கிய தானங்களை வர்ணிக்கும் சாசனங்கள் சில உள்ளன.

## 8. திருவெள்ளறை ஓவியங்கள்

திருச்சி மாவட்டத்துத் திருவெள்ளறையில் அமைந்துள்ள ஆலயங்களில் ஒன்று புண்டரீகாக்ஷர் கோயில். அதன் திருச்சுற்று மாளிகைச் சுவர்களிலும் விதானங்களிலும் முற்காலங்களில் ஓவியங்கள் காணப்பட்டன. ஆனால் இந் நாட்களிலே சித்திர மண்டபத்து விதானத்தில் மட்டுமே ஓவியங்கள் உள்ளன. அங்குள்ள சில சித்திரங்கள் இராமாயணக் கதையின் சில அம்சங்களை விளக்குவனவாகும்.வேறு சில சித்திரங்கள் அழகிய பூ வேலைப்பாடுகளின் கோலமானவை.

சில சித்திரங்கள் அசாதாரணமான உருவங்களின் விளக்கமானவை.ஒரு தலை கொண்ட இரு மீன்களின் வடிவங்கள், ஒரே தலையுடன் அமைந்த எருது, யானை ஆகியவற்றின் உருவங்கள், ஒரு மீனுக்கும் மனிதனொருவனுக்கும் பொதுவான ஒரே தலை என்ற விதமாக விசித்திரமான உருவங்கள் அவற்றிலே காணப்படுகின்றன.

திருவெள்ளறையிலே சீதைக்கு அனுமன் சூளாமணி கொடுத்தது வரையிலான இராமாயணக் கதை ஓவியமாக வரையப்பெற்றுள்ளது. சுக்கிரீவனின் பட்டாபிஷேகம் மிகுந்த வனப்புடன் விளங்குகின்றது. பாம்பாட்டியின் உருவகமான ஓவியம் அங்குள்ள மற்றுமொரு சிறப்பான சித்திரமாகும். மகுடி ஊதும் பாம்பாட்டியின் வடிவமும் அதன் முன் பட மெடுத்தாடும் நாகமும் பாம்பாட்டியின் அருகிலிருந்து கொண்டு அதனை அவதா னிக்கும் குரங்கின் உருவமும் இயற்கை வனப்புடன் காணப்படுகின்றன.

## 9. திருமலைச் சமணர் ஓவியங்கள்

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் திருமலையிலே முதலாம் இராஜராஜனின் தமக்கையாரான ஆழ்வார் பராந்தகன் குந்தவையாரால் அமைக்கப்பட்ட சமணப்பள்ளி இன்றும் நிலைபெறுகின்றது. மலையின் அடிப்பகுதியில் முற்காலத்திற் பல ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. காலப்போக்கில் கட்டடம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இயற்கையாக அமைந்துள்ள மேல் விதானத்தில் இப் பொழுதும் சில ஓவியங்கள் காணப்படுகின்றன.

பூவேலைப்பாடுகள் அமைந்த திரைச் சீலை விரிப்பும் போலச் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. அடுத்துள்ள அறையிலே சமண முனிவர்களின் உருவங்களும் பெண்கள் சிலரின் உருவங்களும் சித்திரக் கோலத்தில் அமைந்துள்ளன. வேறொரு அறையிலே சமண சமய மரபிலுள்ள சமவசரணத்தின் காட்சி அமைந் துள்ளது. செங்கற் கட்டடத்தின் புறத்தே பெண்கள் மூவரின் முகங்கள் அழகாக வரையப்பட்டுள்ளன.

## 10. திருப்புடைமருதூர் ஓவியங்கள்

விஜயநகர காலத்து ஓவியங்கள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருப்புடைமருதூர் கோயிற் கோபுரத்திலுங் காணப்படுகின்றன. அவை சமயச் சார்பற்றவை. அவை சமகாலத்து வாணிபத்தின் அம்சமொன்றின் விளக்கமானவை. அராபிய வணிகர் கப்பலொன்றிற் குதிரைகளோடு வந்திறங்குங் காட்சி ஓவியமாக அங்கு வரையப்பட்டுள்ளது. குதிரைகளின் வடிவங்கள் கம்பீரமான தோற்றத்துடன் காணப்படுகின்றன.

படைகளுக்கு வேண்டிய குதிரைகளை விஜயநகர ராயர்கள், அராபியர், பாரசீகம் முதலிய தேசங்களிலிருந்தும் வணிகர் மூலம் இறக்குமதி செய்தார்கள். பெருந்தொகையான குதிரைகளை வணிகர் தென்னிந்தியப் பிரதேசங்களுக்கு இறக்குமதி செய்தமை பற்றிய பல குறிப்புகள் நூல்களில் உள்ளன. அவற்றை உறுதி செய்யுமாப் போலத் திருப்புடைமருதூர் ஓவியங்கள் அமைந்துவிடுகின்றன.

பேராசிரியர் சி.பத்மநாதன்

விஜயநகர காலத்திலே புராணக் கதைகளையும் இராமாயணக் கதைகளையும் ஆதாரமாகக் கொண்ட காட்சிகள் சுவரோவியங்களாக வரையப்பட்டன. அவை அளவிற் பெரியனவாகவும் புதிய அம்சங்கள் பொருந்தியனவாகவுங் காணப்பட்டன. அவற்றுடன் கிருஷ்ணரைப் பற்றிய ஓவியங்களே மிகுந்து காணப்பட்டன.

அங்கலக்ஷணங்கள், மனித உருவங்களின் முக பாவங்கள், ஆடை ஆபரணங்கள் ஆகியவற் றைப் பொறுத்த வரையில் அவற்றிலே சில புதிய பண்புகளை அவதானிக்க முடிகின்றது. (தொடரும்)

“விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்” ஆய்வுத் தொடரில் நாளை பேராசிரியர் சி.பத்மநாதனின் “நாயக்கர் காலத்து ஓவியங்கள்” ஆய்வுக் கட்டுரை பிரசுரமாகும்.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# கதிர்த்தொழிற்பாடும் அவற்றின் பிரயோகங்களும்...

வளர்ந்து வருமிந்த விஞ்ஞான உலகிலே மூலைமுடுக்கெங்கிலும் நடக்கும் நிகழ்வுகளை இருந்த இடத்திலிருந்த வண்ணமே கண்டுகளிக்கும் நாம், இற்றைக்கு ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் முன்னால் கண்டறியப்பட்ட கதிர்த் தொழிற்பாடு பற்றியும் அதன் பிரயோகங்கள் பற்றியும் அறிந்திருப்பது அவசியமல்லவா?

கதிர்த் தொழிற்பாடானது 1896ஆம் ஆண்டளவில் ஹென்றி பெக்ரல் (Henry Becquerel) எனும் விஞ்ஞானியால் இனங் காணப்பட்டது. இதற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் மேரி கியூரி அம்மையாராலும் அவருடைய கணவர் பியேராலும் கதிர்த் தொழிற்பாட்டு மூலகங்களான தோரியம் (Thorium (Th)), ரேடியம் (Radium (Ra)), பொலோனியம் (Polonium (Po)) என்பவை இனங் காணப்பட்டன. இவர்களுடைய கண்டுபிடிப்புக்களை மெச்சி 1903ஆம் ஆண்டளவில் மேரி கியூரி அம்மையாருக்கும் ஹென்றி பெக்ருலுக்கும் நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.


***கதிர்த்தொழிற்பாட்டுக் கதிர்கள்***

அணுவொன்றின் கருவின் உறுதி நிலையானது, கருவிலுள்ள நியூத்திரன் மற்றும் புரோத்திரன்களிற்கிடையிலுள்ள விகிதத்தில் தங்கியுள்ளது. கருவின் உறுதித் தன்மை குறைவடைகின்ற பொழுது அணுவானது உறுதியற்றதாகின்றது. இத்தகைய உறுதித் தன்மையற்ற கரு நியூத்திரன் ஒன்றை இழப்பதன் மூலம் கதிர்த் தொழிற்பாடுடையதாகின்றது.

கதிர்த் தொழிற்பாடுள்ள மூலகங்களிலிருந்து மூன்று வகையான கதிர் வீசல்கள் நிகழ்கின்றன. கதிர்த் தொழிற்பாட்டினால் ஏற்படும் கதிர்களை மின்மண்டலத்தினூடாகச் செலுத்தும் பொழுது மூன்று வகைக் கதிர்களை இனங்காணலாம்.

அவையாவன,

$\alpha$ -கதிர்கள் (Alpha rays)
$\beta$ - கதிர்கள் (Beta rays)
$\gamma$ - கதிர்கள் (Gama rays)




$\alpha$ - கதிர்கள் நேர்மின்னேற்றமுள்ள துகள்களைக் கொண்டுள்ளவை. இவை மின் மண்டலத்தில் எதிர் மின்னேற்றமுள்ள தகட்டின் பக்கமாகக் கவரப்படும். இவை பருமனில் மிகப் பெரியவையாக இருப்பதால் திணிவு பதார்த்தங்களூடாக ஊடுருவிச் செல்லும் இயல்பு குறைந்தவையாகக் காணப்படுகின்றது.


மின்மண்டலத்தில் நேர்மின்னேற்றமுள்ள தகட்டின் பக்கம் திரும்பலடையும் கதிர்கள் $\beta$ - கதிர்களாகும். இக்கதிர்களின் ஏற்றம் - திணிவு விகிதமானது (e/m) கதோட்டுக் கதிர்களின் e/m விகிதத்திற்குச் சமனாக அமைவதால் இவையும் இலத்திரன்களாகும். இவை பருமனில் சிறியவையாகவும் கூடுதல் வேகமும் கொண்டமையால் $\alpha$-துணிக்கைகளிலும் அதிக ஊடுருவும் திறன் கொண்டவை.

$\gamma$ - கதிர்கள் மின்மண்டலத்தில் ஒருவித திசை மாற்றமும் இல்லாது காணப்படும். இவை மின்னேற்றமற்ற நடுநிலையான துகள்களாகும். ஒளி அலைகளை ஒத்ததும், அலை நீளம் குறைந்ததுமாகக் காணப்படும் மின் காந்தக் கதிர்வீசல் தன்மையை இவை காட்டும். இவை அதிக ஊடுருவும் திறன் கொண்டவை.

***அரை ஆயுட்காலம்***

கதிர்த்தொழிற்பாடுள்ள மூலகங்களில் கதிர் வீசல் நிகழ்வதனால் அவை தேய்வடைகின்றன. ஆயினும், கதிர்த் தொழிற்பாட்டு மூலகங்கள் ஒரு பொழுதும் முற்றாகத் தேய்வடையமாட்டாது. தேய்வடையும் காரணத்தால் மூலகத்தின் கதிர்த் தொழிற்பாட்டுச் செறிவு அளவிட முடியாத வகையில் குறைவடையும். எனவே கதிர்த் தொழிற்பாடுடைய மூலகங்களைக் குறிப்பதற்கு அரை ஆயுட்காலம் எனும் பதம் பயன்படுகிறது.

ஒரு மூலகத்தின் அரை ஆயுட்காலம் / அரைச்சீவிய காலம் என்பது ஒரு கதிர்த் தொழிற்பாட்டு மூலகத்தின் ஆரம்பத்தில் இருந்த கதிர்த்தொழிற்படும் தன்மை அரைப் பகுதியாக மாறுவதற்கு எடுக்கும் காலமாகும்.




*கதிர்த் தொழிற்பாட்டுச் சமதானியின் செறிவிற்கும் அரைஆயுட்காலத்திற்குமுள்ள தொடர்பு -*

**கதிர்த்தொழிற்பாட்டின் பயன்கள்**

கதிர்த் தொழிற்பாட்டின் பிரயோகமானது விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம் போன்ற பல்வேறுப்பட்ட துறைகளில் தனது பங்களிப்பைச் செய்து மனிதனின் ஆராய்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுகிறது.

**● இரசாயனத்தில்**

இரசாயனத் தாக்கங்களின் தாக்கப் பொறிமுறைகளை அறிந்து கொள்வதற்கும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒரே மூலகங்கள் கொண்ட மூலக்கூறுகளின் கட்டமைப்பைத் துணிவதற்கும் கதிர்த் தொழிற்பாட்டு மூலகங்கள் பயன்படுத்தப்படுகின்றது.

**● கைத்தொழில் துறையில்**

பெற்றோலின் மசகு எண்ணெய், சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து மிகக்கூடிய தூரங்களிற்குக் குழாய் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. இவை நிலத்தில் புதைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான குழாய்களாகும். மசகு எண்ணெயிலுள்ள மாசுப் பொருட்கள் குழாய்களில் படிவதால் குழாய்களில் ஏற்படும் அடைப்புக்களைச் சரிசெய்வதற்கு $\gamma$-கதிர்வீசல் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது $\gamma$-கதிர்வீசல் மூலம் குழாயில் தடைப்பட்ட பகுதியானது கண்டறியப்பட்டு அவ்விடத்திலுள்ள குழாயானது தோண்டி எடுக்கப்பட்டு குழாயானது துப்புரவாக்கப்படும். இதனால் பெரும் செலவில்லாது மாசுக்கள் அகற்றப்படுகின்றது.

**● மருத்துவத்தில்**

கதிர்த் தொழிற்பாட்டு சமதானியின் உபயோகமானது மருத்துவத்தில் அதிகளவு பங்களிப்பை இன்றைய காலங்களில் வழங்கி வருகின்றது. பொருத்தமான திரவ நிலையில் கதிர்த் தொழிற்பாட்டு மூலகமானது வாய்மூலமாகவோ, ஊசி மூலமாகவோ உட்செலுத்தப்பட்டு நோயானது இனங்காணப்படுகின்றது.

**கண்டக்கழலை (Thyroidisis)**

இதற்கு கதிர்த் தொழிற்பாட்டு அயடீன் ($^{131}I$) பயன்படுத்தப்படுகின்றது.

**சிறுநீரகதொழிற்பாடு (Kidney Function)**

இதற்கு ($^{131}I$) சமதானி பயன்படுத்தப்படுகின்றது.

**மூளையிலுண்டாகும் கழலைகள் (Brain tumor)**

ரெக்நெற்றியம் ($^{99}Tc$) எனும் மூலகத்தின் $TcO_4^-$ அயனைக் கொண்ட உப்பு நோயாளிக்கு செலுத்தப்பட்டு கழலைகளின் இட அமைவு அறியப்படுகிறது.

**குருதிக் குழாய்களில் ஏற்படும் தடங்கல்கள் (Defective blood circulation)**

இதற்கு கதிர்த்தொழிற்பாட்டு சோடியமானது $^{24}Na$ உடலில் செலுத்தப்பட்டு குறைபாடுள்ள இடமானது இனங்காணப்படும்.


இதுதவிர என்புகள் பற்றிய ஆராய்ச்சிகள், ஈரல், சுவாசப்பை போன்றவற்றில் ஏற்படும் நோய்களை இனங்காணவும் பல்வேறுபட்ட கதிர்த்தொழிற்பாட்டு சமதானிகள் உபயோகிக்கப்படுகின்றன.

**● விவசாயத்தில்**

கதிர்த்தொழிற்பாட்டு சமதானிகள் விவசாய ஆராய்ச்சியில் பெரிதும் தமது பங்களிப்பைச் செய்கின்றன. இதன் மூலம் தாவரத்தில் நடைபெறும் உயிரியல் மற்றும் இரசாயனத் தாக்கப் பொறிமுறைகள் அறியப்படுகின்றன.

**உரப் பயன்பாட்டின் நன்மை**

கதிர்தொழிற்பாடுடைய பொசுபரசு ($^{32}P$)





சமதானியானது ஊசி மூலமாக தாவரத்திற்குச் செலுத்தப்பட்டு அதன் தாக்கப் பொறிமுறையானது கைகர் எண்ணியின் மூலம் கண்டறியப்படும்.

இதிலிருந்து தாவரமானது எந்தவகையில் பொசுபரசை தனது வளர்ச்சிக்காக உபயோகிக்கப்படுத்துகின்றது என்பது கண்டறியப்படும்.

**கதிர்வீசப்பட்ட உணவு**

உணவுக் கதிர்வீச்சானது உணவுகளைக்




கெடாமல் நீண்டகாலம் உபயோகிப்பதற்கேற்ற வகையில் பேணப் பயன்படுகின்றது. இதன் மூலம் மிகவும் நுண்ணிய அங்கிகளின் தோற்றப்பாடு மற்றும் வளர்ச்சியானது கட்டுப்படுத்த அல்லது இல்லாதொழிக்கப்படுகிறது.

- உணவுக் கதிர்வீசலிற்குப் பெரும்பாலும் கதிர்த் தொழிற்பாட்டுக் கோபோல்றே ($^{60}Co$) பயன்படுத்தப்படுகின்றது.
- மூலிகைகள், பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளே பொரும்பாலும் இம்முறை மூலம் பேணப்படுகின்றன.

**● சமதானி ஐதாக்கற்பகுப்பு**

இம்முறையைப் பயன்படுத்தி இலகுவாகக் கனவளவு அறியமுடியாத திரவங்களின் கனவளவை அறியலாம். உதாரணமாகச் சுரங்கங்களிலுள்ள நீர், மசகு எண்ணெய் போன்றவற்றின் கனவளவை அறிவதற்கு இம்முறை பயன்படுகின்றது. இதுதவிர மிருகமொன்றிலுள்ள குருதியின் அளவைக் கூட இம்முறையால் அளவிடலாம்.

**● காபன்தேதியிடல்/காபன்காலங்குறித்தல்**

இம்முறையானது புவிச்சரிதவியல், தொல் பொருளாராய்ச்சி போன்றவற்றில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. முன்பு உயிருடன் இருந்த பொருட்களின் எலும்புகள், மரங்கள் போன்றவற்றின் வயதுகளைக் கதிர்த் தொழிற்பாடு மூலம் அறிந்து கொள்ளலாம்.


**ஷிவதர்சினி இராசலிங்கம்**
**உதவி விரிவுரையாளர்,**
**இரசாயனவியல் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**


இங்கு பொருட்களிலுள்ள $^{14}_{6}C$, $^{12}_{6}C$ விகிதம் அளவிடப்படுவதன் மூலமே பொருட்களின் வயதுகள் கணிக்கப்படுகின்றன. வளிமண்டலத்தின் மேற்பகுதியில் அண்டக் கதிர்களில் (Cosmic rays) உள்ள நியூத்திரன்கள் $^{14}_{7}N$ அணுக்களுடன் மோதுவதால் $^{14}_{6}C$ அணுக்கள் உருவாகின்றன.

$$^{14}_{7}N + ^{1}_{0}n \longrightarrow ^{14}_{6}C + ^{1}_{1}P$$

$^{14}_{6}C$ உறுதியற்றதாகையால் அது பிரிவடையும். இதன் அரையாயுட்காலத்தின் துணையுடன் வயது அறியப்படவேண்டிய பொருட்களின் வயதுகள் அறியப்படும்.

இன்று அண்டவெளியில் நடாத்தப்படும் அணு ஆயுத சோதனைகளால் இனிவருங்காலங்களில் இவ்வாறானதொரு ஆய்வு கேள்விக்குறியாகவே உள்ளது.

இவை தவிர கதிர்த்தொழிற்பாட்டு சமதானியின் தேய்வின் போது அதிகளவு சக்தி வெளிவிடப்படுவதனால் அந்தச் சக்தியானது பெரும் சவால்களிற்கு மத்தியில் மின்சக்தியாக மாற்றப்பட்ட போதிலும் குறைவான வலுவையே பெறக்கூடியதாக இருந்தது.

இவ்வாறாக பலதரப்பட்ட துறைகளிலும் தமது பங்களிப்பைச் செலுத்தியுள்ள கதிர்த்தொழிற்பாட்டின் பிரயோகமானது சில பாவனை முறைகளால் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றது. சில வகையான கதிர்ப்பு மூலகங்களில் வெளிவிடப்படும் கதிர்கள் மனிதனின் உடலிற்கு தீமையை விளைவிக்கக்கூடியன.

அதேவேளை குறைந்த ஆயுட்காலம் கொண்ட மூலகங்கள் (பொசுபரசு) விரைவான பாவனைக்கு உட்படுத்த வேண்டிய தேவையில் உள்ளன. இவையெல்லாம் நடைமுறையில் சாத்தியமாவது கடினம்.

எனவே முறையான பாவனை முறை மூலம் அரிதாகக் காணப்படுகின்ற பயன் பலமிக்க கதிர்த்தொழிற்பாட்டு மூலகங்களை இனங்கண்டு அவற்றின் பயனைப் பெற விளைவோமாக.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 13

**மிகப் பெரிய குட்டியை ஈனும் கடல் வாழ் விலங்கினம் எது?**

**விடைகளை 03-02-2010 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி**

Mr. V. Senthil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna. Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப்பணப் பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட, மீன்பிடியியல் துறையில் கலாநிதி சி. குகநாதனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.


பரிசுக்கு அனுசரணை வழங்குவோர் :
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழக கிளை.


**புதிர் 11 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

திரு.கே. இராஜகோபால்
அடைக்கலந்தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**புதிர் 12 இற்கான விடை : Keratin**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 10


சரியான விடை ..............................
முழுப்பெயர் ..............................
முகவரி ..............................

கையொப்பம் ..............................

# ஓசாமா பின்லேடன் ஆப்கான் எல்லையில் உள்ளார்

## அமெரிக்க அறிக்கை தெரிவிப்பு

(வோஷிங்டன்)




அல்கொய்தாவின் முக்கிய தலைவர்களான ஓசாமா பின்லேடனும் அய்மன் அல்-ஜவாகிரியும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் உயிரோடுதான் இருக்கின்றனர் என்று அமெரிக்க செனட் குழுவின் சமீபத்திய அறிக்கை தெரிவித்துள்ளது. அமெரிக்க வெளியுறவுக்கான செனட் குழு தலிபான் பயங்கரவாதிகள் மற்றும் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றி 21 பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கில் அல்கொய்தாவின் பயங்கரவாத முகாம்கள் செயற்படுகின்றன. இப்போது அந்த எல்லையையும் தாண்டி ஏமன், சோமாலியா வரை தங்கள் கரங்களை நீட்டியுள்ளன. பின்லேடனும் ஜவாகிரியும் பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் புறங்களில்தான் ஒளிந்திருக்கின்றனர்.

அவர்களுடன் அல்கொய்தாவின் முக்கிய பயங்கரவாதிகளும் ஒளிந்துகொண்டிருக்கின்றனர். அவர்கள் பாகிஸ்தானில், பாகிஸ்தானை ஆக்கிரமிக்க நினைக்கும் அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுங்கள் என்ற ரீதியில் மக்களிடம் பிரசாரம் செய்து வருகின்றனர்.

மேலும் பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் இயங்கிவரும் அமெரிக்க ஆதரவு அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராகவும் மக்களைத் திருப்பி விடுகின்றனர். தற்போது மேற்கொண்ட கடும் நடவடிக்கையால் 2001இலிருந்து இதுவரை 500 அல்கொய்தா பயங்கரவாதிகளை கைது செய்து அமெரிக்காவின் விசாரணைக்கு அனுப்பியிருப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

கூட்டுப் படைகளின் ஏவுகணைத் தாக்குதலால் பைதுல்லா மெசூத் போன்ற முக்கிய அல்கொய்தா தலைவர்கள் இறந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இந்த நடவடிக்கைகளால் பயங்கரவாதிகள் வடமேற்கு எல்லைப் புறங்களிலிருந்து தப்பித்து பாகிஸ்தானின் நகரங்களுக்குள் ஊடுருவ வாய்ப்புள்ளது என்றும் அப்படிப் புகுந்துவிட்டால் அவர்களை அடையாளம் கண்டறிவது மிகக் கடினம். ஸ்வாட் பள்ளத்தாக்கு மற்றும் மேற்கு வசீரிஸ்தான் பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவம் வெற்றிகரமாகப் போராடி வருகிறது. இருப்பினும் சில பழங்குடிப் பகுதிகளில் இருந்து கொண்டு பயங்கரவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)



அரசு முறைப்பயணமாக இந்தியா வந்துள்ள மலேசிய பிரதமர் நஜீப் ரசாக் டில்லியில் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாவைச் சந்தித்துப் பேசினார்.

# எட்டு நாட்களின் பின் குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது

## ஹெயிட்டியில் சம்பவம்

ஹெயிட்டி நாட்டில் பூகம்பம் ஏற்பட்டு 9 நாட்கள் ஆகிவிட்டது. இன்னும் மீட்பு பணிகள் முழுமையாக நடக்கவில்லை. மொத்தம் 2 இலட்சம் பேர் பலியாகியுள்ளனர். இதுவரை 75 ஆயிரம் பேர் உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளன. இன்னும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட உடல்கள் இடிபாட்டுக்குள்ளேயே சிக்கிக் கிடக்கின்றன.

மீட்புப் பணிகளில் சர்வதேச குழுக்கள் ஈடுபட்டுள்ளன. இப்போதுதான் மீட்புப் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது.

பூகம்பம் ஏற்பட்டு 9 நாட்கள் ஆகிவிட்ட போதிலும் இப்போதும்கூட இடிபாட்டுக்குள் இருந்து பலர் உயிருடன் மீட்கப்பட்டு வருகின்றனர். அங்குள்ள ஜேக்மல் என்ற கிராமத்தில் அறுநூறு வீடுகள் இடிந்து விழுந்து இருந்தன. அங்கு இப்போதுதான் மீட்புப் பணி தொடங்கியுள்ளது. கொலம்பியா நாட்டு மீட்புக் குழுவினர் இந்தப் பணிகளைச் செய்து வருகின்றனர். பூகம்பம் ஏற்பட்டபோதுதான் ஒருவர் பிறந்து 3 வாரங்களே ஆகியிருந்த தன் குழந்தையை வீட்டுக்குள் போட்டுவிட்டு தப்பி வெளியே வந்துவிட்டார். அவர் மீட்பு குழுவினரிடம் எனது குழந்தை வீட்டுக்குள் சிக்கிக் கொண்டது. அதன் கதி தெரியவில்லை என்று கூறினார்.

உடனே மீட்பு குழுவினர் அந்த வீட்டில் இடிபாடுகளை நீக்கினார்கள். அங்கு அந்தக் குழந்தை எந்தவித காயமும் இல்லாமல் உயிருடன் கிடந்தது. குழந்தை கிடந்த இடத்தில் ஒரு இராட்சத தூண் ஒன்று விழுந்து சில உயரத்தில் குடை போல் நின்று கொண்டிருந்தது. இதனால் குழந்தைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. அந்தக் குழந்தையைப் பத்திரமாக மீட்டனர். 8 நாட்களாக உணவு தண்ணீர் எதுவும் சாப்பிடாமல் இருந்தும் அந்தப் பச்சிளம் குழந்தை உயிர் பிழைத்திருப்பது அதிசயமாகக் கருதப்படுகின்றது.

இதற்கிடையே ஹெயிட்டியில் நேற்று முன்தினமும் மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. இதில் சேதம் ஏதும் இல்லை. ஆனாலும் மீண்டும் பூகம்பம் ஏற்பட்டிருப்பதால் மக்கள் பீதியில் உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# அமெரிக்க செனட் சபைத் தேர்தலில் ஒபாமாவின் கட்சி உறுப்பினர் தோல்வி

அமெரிக்காவில் மாசசூட்ஸ் செனட் உறுப்பினர் பதவிக்கான தேர்தல் நடந்தது. இதில் குடியரசுக் கட்சி வேட்பாளர் ஸ்காட் ட்ரவுன் வெற்றிபெற்றார். இந்தத் தேர்தல் முடிவு ஜனாதிபதி ஒபாமாவுக்கு பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது அவருக்குப் பின்னடைவாகும். ஜனநாயக கட்சியைச் சேர்ந்த டெட் கென்னடி கடந்த 47 ஆண்டுகளாக மாசசூட்ஸ் செனட் உறுப்பினராக இருந்தார். அவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து காலியான இடத்துக்காக தேர்தல் நடந்தது.

இதில் ஜனநாயகக் கட்சி சார்பில் மார்த்தா கோக்லி போட்டியிட்டார். அவரை எதிர்த்து குடியரசுக் கட்சி சார்பில் ஸ்காட் ட்ரவுன் நின்றார். வாக்குகள் எண்ணப்பட்டபோது ஸ்காட் 52 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். ஜனநாயக கட்சி வேட்பாளர் மார்த்தாவுக்கு 47 சதவீத வாக்குகளே கிடைத்தன. மாசசூட்ஸ் ஜனநாயக கட்சியின் கோட்டை ஆகும். இந்தத் தொகுதியில் குடியரசுக் கட்சி வெற்றிபெற்றது. ஜனநாயகக் கட்சியினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தோல்வி மூலம் ஜனநாயக கட்சி செனட் சபையில் பெரும்பான்மையை இழந்தது. மொத்தம் 100 உறுப்பினர்கள் கொண்ட செனட் சபையில் ஜனநாயக கட்சிக்கு 60 பேர் இருந்தனர். இப்போது அதன் பலம் 59 ஆகக் குறைந்துவிட்டது. இதனால் செனட் சபையில் ஒபாமாவின் சட்டங்கள் நிறைவேறுவது கடினமாகிவிடும் என்று கருதப்படுகிறது.

இதேவேளை இந்தத் தேர்தல் முடிவு மோசமான வேட்பாளருக்கு எதிரான தீர்ப்பு இல்லை. மோசமான கொள்கைகளுக்கு எதிரான தீர்ப்பு என்றும் ஒபாமாவின் கொள்கைகள் மீதான வாக்கெடுப்புத்தான் இது என்றும் குடியரசுக் கட்சி கூறியுள்ளது. (2-6)

# தற்கொலை எண்ணத்தை போக்க — கர்நாடக இசை உதவும் —

## ரவிசங்கர் பேச்சு




மாணவர்களின் தற்கொலை எண்ணத்தை மாற்றவல்லது கர்நாடக இசை என வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் ரவி சங்கர் தெரிவித்துள்ளார்.

மும்பையில் கடந்த வாரம் மருத்துவக் கல்லூரி மாணவி உட்பட மூன்று மாணவர் கள் தனித்தனி சம்பவங்களில் ஒரே நாளில் தற்கொலை செய்துகொண்டனர். இது குறித்து ரவிசங்கர் கூறியதாவது, மன அழுத்தம் மற்றும் மனக் கவலைகளை ஆற்றும் சக்தி சங்கீதத்துக்கு உண்டு. குறிப்பாக நமது பாரம்பரிய கர்நாடக இசைக்குண்டு. இளைஞர்களுக்கு இந்த இசை ஆர்வத்தை ஊட்ட வேண்டும். இந்த இசை ஆர்வம் மனக் கவலைகளை போக்குவதோடு ஆன்மீகத்திலும் நாட்டத்தை ஏற்படுத்தும். இதன்மூலம் மாணவர்களுக்கு தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் ஏற்படாது.

இந்திய கலாசாரத்தில் உள்ள நல்ல விஷயங்களை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும். மற்ற கலாசாரங்களையும் நாம் மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும். ஆன்மீகம் என்பது அறிவியலில் இருந்து விலகியதல்ல. சுவாமி விவேகானந்தர் அறிவியலையும் ஆன்மீகத்தையும் ஏற்றுக்கொண்டு தான் பிரசாரம் செய்தார். பெண் சிசு கொலையை தடுக்க வேண்டும். பெண் குழந்தைகளை பாதுகாத்து அவர்களுக்கு நல்ல கல்வியை அளிக்க வேண்டும். இரசாயன கலப்பில்லாமல் பயிர் செய்யும் முறையை விவசாயிகள் பின்பற்ற வேண்டும். இவ்வாறு ரவிசங்கர் கூறினார். (2-6)

# ஜோதிபாசுவின் மூளையை ஆராய்ச்சி செய்யத் திட்டம்

(புதுடெல்லி)



சமீபத்தில் மரணமடைந்த மார்க்சிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஜோதிபாசுவின் மூளையை ஆராய்ச்சி செய்ய பெங்களூரைச் சேர்ந்த தேசிய முதன்மை மனநல சுகாதாரம் மற்றும் நரம்பு அறிவியல் மையம் திட்டமிட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் மூத்த தலைவரும் மேற்கு வங்கத்தில் தொடர்ந்து 23 ஆண்டுகள் முதல்வராக இருந்து சாதனை படைத்தவருமான ஜோதிபாசு, கடந்த ஞாயிறன்று தனது 95ஆவது வயதில் மரணமானார்.

அவர் தனது உடலை மருத்துவக் கல்வி மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்த கொல்கத்தாவிலுள்ள எஸ்.எஸ். கே.எம். மருத்துவக் கல்லூரிக்கு தானமாக அளிக்க விருப்பம் தெரிவித்திருந்தார். அதன் படி இறுதி அஞ்சலி செலுத்தப்பட்ட பிறகு மருத்துவக் கல்லூரியிடம் அவருடைய உடல் ஒப்படைக்கப்பட்டது. வழக்கமாக முதுமை அடையும் போது மூளையின் செயற்பாடும் எல்லா வகையிலும் படிப்படியாக மங்கிவிடும். குறிப்பாக நினைவாற்றல் குறைந்து ஞாபக மறதி அதிகரிக்கும்.

நரம்புத் தளர்ச்சி ஏற்படும். ஆனால் ஜோதிபாசுக்கு வயது முதிர்ந்து வந்தபோதிலும் அவருடைய மூளையின் செயற்பாடு மிகவும் சிறப்பாகவும், இளமையாகவும் இருந்தது. மூளை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுவரும் பெங்களூரைச் சேர்ந்த தேசிய முதன்மை மனநல சுகாதாரம் மற்றும் நரம்பு அறிவியல் மையத்துக்கு (நிம்ஹன்ஸ்) இது ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதனால் ஜோதிபாசுவின் மூளை சிறப்பாக செயற்பட்டதற்கான காரணத்தை அறிய அவருடைய மூளையை ஆராய்ச்சி செய்ய இந்த மையம் திட்டமிட்டுள்ளது. அதற்காக அவருடைய மூளையை தங்களிடம் ஒப்படைக்க முடியுமா? என்று எஸ்.எஸ்.கே.எம். மருத்துவக் கல்லூரிக்கு கடிதம் எழுத இருப்பதாக இந்த மையத்தின் இயக்குநர் நாகராஜா கூறியுள்ளார். இது பற்றி நாகராஜா அளித்த பேட்டியில், ஜோதிபாசுவின் மூளையை ஆராய்ச்சி செய்வதற்கு எங்கள் மையத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் மிகவும் ஆர்வமாக இருக்கின்றனர். எங்கள் மையத்தில் உள்ள மூளை வங்கியில் 300 பேரின் மூளைகள் பாதுகாக்கப்பட்டு, ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதுமையின்போது பெரும்பாலும் நரம்பு தளர்ச்சி நோய்த் தாக்கும். அதுபோன்ற குறைபாடு எதுவும் ஜோதிபாசுவுக்கு இல்லை. அதை குறிப்பிட்ட சில மரபணு தடுக்கிறது. அதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்றார். (2-6)

நரி தன் கனவில் கூட கோழிகளை எண்ணிக் கொண்டே இருக்கும்
~ வாலஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொதுத் தேர்தலிலேயே கண்ணாயினர்

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் சில நாட்கள் இருக்கின்ற போதிலும் தேர்தல் பிரசாரம் யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளில் போதுமானதாக இல்லை என்பதைக் கூறித்தான் ஆக வேண்டும்.

இங்கு தேர்தல் பிரசாரம் என்பது மந்த நிலையில் உள்ளது.

தமிழ் மக்கள் யாரை ஆதரிக்க வேண்டுமென்ற தெளிவு இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற முடிபுகள் கட்சிகள் ரீதியாக–அமைப்புகள் ரீதியாக எடுக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் அதற்கான நியாயப்பாடுகள் இதுவரை முன்வைக்கப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்தது. அதற்கான சில காரணங்களையும் பத்திரிகைகளில் வெளியிட்டு இருந்தது.

ஆனால் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட பிரசாரம் என்வென்றால் எதுவுமே இல்லை.

ஆக, ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாகக் கூறிவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசாதிருப்பது எதற்காக?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாக தெரிவித்ததை மையமாகக் கொண்டு சரத் பொன்சேகாவுக்கும் இரா. சம்பந்தனுக்குமிடையே இரகசிய ஒப்பந்தம் உண்டென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு தென்பகுதியில் கடுமையாகப் பிரசாரம் செய்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழுங்குதை தனக்குச் சாதகமாக்கி தென்பகுதி சிங்கள மக்களின் வாக்குகளை தன் பக்கம் இழுக்கும் திட்டம் வெற்றி பெறுமாக இருந்தால்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தமையால் சரத் பொன்சேகா தோற்றார் என்ற முடிபும் விமர்சனமும் எழும்.

அதேநேரம் சரத் பொன்சேகாவை தோற்கடிப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவருக்கு ஆதரவு வழுங்குவதாக நடித்தது என்ற குற்றச்சாட்டும், இதற்காக கூட்டமைப்பு கையேந்தி விட்டது என்ற பழிச்சொல்லும் அடுத்த கணமே முன்வைக்கப்படும்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலம்போல் அல்லாமல் எடுத்த முடிபை மக்கள் மத்தியில் தெளிவு படுத்த வேண்டும்.

இதைவிடுத்து தமிழரசுக் கட்சியை புதுப்பித்து, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பதவி பெறும் நோக்கமும் அதற்கான ஒன்றுகூடல்களும் நடக்குமாக இருந்தால்,

யாழ்ப்பாண மண்ணில் சுதந்திரமான–சேவை நோக்கமுள்ள மனிதர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்குவர்.

அவ்வாறு களமிறங்கினால் அது வலம்புரிச் சங்கு எடுத்து களமாடிய கண்ண பரமாத்மாவின் குருஷேத்திர வெற்றியாகவே இருக்கும்.

# நிறைவேற்று அதிகாரம் சுவைமிக்கது சரத் என் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்ய வேண்டுமா இல்லையா எனத் தீர்மானிப்பதற்கு தற்போது சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மாத்தறை சனச மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தான் அதிகாரத்திற்கு வந்தால் ஜனாதிபதி பதவிக்கு இருக்கும் அநாவசியமான அதிகாரங்களை நீக்கப் போவதாக ஜனாதிபதி தற்போது கூறுகிறார். எனினும் அநாவசியமான அதிகாரங்கள் என்ன என்பதை அவர் கூறவில்லை.

ஜனாதிபதித்தேர்தல் மிக முக்கியமான தேர்தலாகும். அத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதால் இந்தத் தேர்தல் மிக முக்கியமாக அமைந்துள்ளது.

அதிகாரம் சுவைமிக்கது. பதவிக்கு வந்தபின்னர் சுவைப்பதால் ஆசை ஏற்படும். அதனை அதிகரிக்க மேலும் காலத்தைக் கோருவர். இதுவொரு நோய். பதவியில் அமரும் எவரும் அதனை இரத்துச் செய்யவில்லை. நாம் ஆதரவு வழங்கும் சரத் பொன்சேகா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதாக உறுதியளித்துள்ளார். அவரது உறுதிமொழியைத் தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து தம்பக்கம் இழுக்க முடியாது எனினும் இலங்கையில் அவ்வாறு செய்ய முடியும். நாடாளுமன்றத்தை மீறிச் செல்லும் வாய்ப்பு அரசியல்சாசனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. ஜே.ஆர்.ஜயவர்த்தன இந்த அரசியல் யாப்பை முன்வைத்தார்.

அவர் ஒரு அமைச்சுப் பதவியை மாத்திரம் வகித்தார். நிதியமைச்சுப் பொறுப்பை அவர் வகிக்கவில்லை அதிகாரம் இருந்த போதிலும் ஜே.ஆர்.அதனை செயற்படுத்தவில்லை எனவும் சரத் என் சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)


# சிந்தனை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சிந்தனைக் கூடம் அமைப்பின் ஏற்பாட்டில் *தனித்துவ அடையாளமும் முரண்நிலை அரசியலும்* பற்றிய கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் 6 மணிவரை 182 ,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஐ.ஐ.ரி நிறுவன யாழ் .கிளை வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் சிங்கப்பூர் பல்கலைக்கழக சிரேஷ்ட ஆய்வாளர் கலாநிதி தாரணி இராஜசிங்கம் தனித்துவ அடையாள முரண்நிலையின் அரசியற்பொருளாதாரம் என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

இக் கருத்துரையைத் தொடர்ந்து பங்குபற்றுநர் தமது சிந்தனையைக் கலந்துரையாடல் மூலம் பகிர்ந்து கொள்வர் எனவும் இக்கருத்தரங்கிற்கு ஆர்வமுள்ள அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியுமெனவும் சிந்தனைக்கூட்டத்தின் அமைப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் தெரிவித்துள்ளார். (6-4)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## மகாபாரதத்தில் இராமாயணம்

மகாபாரதத்தில் இராமாயணமா..... இது என்ன புதுக்கதை? என நீங்கள் ஆச்சரியப்படலாம்.

யுதிஷ்டிரனாகிய தர்மர் தனக்கும் தன் மனைவி பாஞ்சாலிக்கும் சகோதரர்களுக்கும் நேர்ந்த துன்பங்களால் என்ன விளையுமோ என்ற கடுமையான மனக்கவலையுடன் இருந்த நேரத்தில் என்றும் இளைஞனாய் இருக்க வரம் பெற்ற மார்க்கண்டேய முனிவர் வந்தார்.

தர்மரிடம் இராமாயணத்தைப் போதித்தார். பாரதத்தில் இந்த பகுதி *இராமோபாக்கியானம்* எனப்படுகிறது. எந்த நிகழ்ச்சி இதில் வருகிறது தெரியுமா? இராமன் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு இலங்கைக்குக் கிளம்பி விட்டார். வழியில் கடல் குறுக்கிடுகிறது. கடலைக்கடக்க என்ன செய்வது? அவர் மிகுந்த வேதனையுடன் இருந்தார். அந்த சமயத்தில் கடல்ராஜன் அவர் முன் வந்து அவரது சேனையில் இருக்கும் நளன் என்ற வானர வீரனைப் பற்றிச் சொல்லி அவன் தன் மீது போடும் கற்கலெல்லாம் மிதக்கும் தன்மை பெற்றவை என்று கூறி அக்கற்களை தன் பலத்தால் தாங்கிக் கொள்வதாக கூறினான். இராமனும் அவ்வாறே செய்தான்.

இந்த நிகழ்ச்சியை மார்க்கண்டேயர் தர்மரிடம் சொன்ன பிறகு எந்தக் கஷ்டத்தைக் கொடுத்தாலும் இறைவன் ஒரு தீர்வையும் பின்னாலேயே அனுப்புகிறான் என்பதைப் புரிந்து கொண்டார். தைரியத்தைப் பெற்றார். பாரதப் போரில் வெற்றியடைந்தார்.

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 107

எமக்குச் சொந்தம் என நாம் கொண்டாடும் மனிதர் பலர் இருப்பர் ஆனால் இச் சொந்தம் நிரந்தரமல்ல என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் நிலையான உறவொன்று எமக்குத்தேவை அந்த உறவு யாரென்பதை மெய்யடியார் பலர் உணர்த்திப் போயுள்ளனர். இறைவனே எமக்கு என்றும் நிரந்தரமான உறவாக இருப்பவர். சம்பந்தர் இறைவனைத் தாயும் தந்தையுமாக எண்ணி வழிபட்டு வாழ்ந்தவர். சுந்தரர் இறைவனை அன்னையாக நினைந்து வழிபட்டவர். தாம் கண்ட உறவை மற்றவர்களும் காணவேண்டும் என்ற பெருவிருப்பு மெய்யடியார்களிடம் இருந்தது. அதனால் இறைவன் திருவுருவத்தை எல்லோரும் கண்டு வழிபட்டு வாழ வழி காட்டியுள்ளனர்.

சுந்தரர் பாடல் சொற்சித்திரம் போலச் சிவனின் அழகிய தோற்றத்தைக் காட்டி நிற்கிறது. இறைவனை நேரே கண்ட போது இறைவன் தோற்றம் மனதிலே ஆழப்பதிந்து விட்டது. தான் கண்ட திருக்கோலத்தை உலகத்து மக்களும் காண வேண்டும் என்ற நோக்கம் சுந்தரரிடம் இருந்ததைப் பாடல்கள் நன்கு உணர்த்தி நிற்கின்றன.

திருமழபாடியில் வீற்றிருக்கும் சிவனின் திருக்கோலத்தைப் பத்துப் பாடல்களில் பாடியுள்ளார். அவர் காட்டும் அழகுக் கோலம் படிப்பவர் மனதைப் பரவசப்படுத்தும் சொல்லால் வரைந்துள்ள இறைவன் திருக்கோலத்தில் திருமேனியழகே அவரைப் பெரிதும் கவர்ந்துள்ளது. பொன்னார்ந்த மேனியிலே புலித்தோலை அரையிலே அணிந்திருக்கும் அழகிய கோலம் கண்ணை நிறைவிக்கிறது. மின்னல் போன்ற சிவந்த சடையிலே கொன்றை மலர் மிளிர்கின்றது. நிறங்களின் இணைப்பு புதிய அழகாகத் தெரிகிறது. திரு மேனி வண்ணத்தோடு அணிந்திருக்கும் ஆடையின் வண்ணமும் மலரின் வண்ணமும் இணைந்த அழகு சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

நிலையாகக் கோயிலிலே உறைகின்ற அழகிய இறைவனைச் சுந்தரர் அன்னையாகக் காண்கிறார். மழபாடியில் உள்ள மாணிக்கமாக ஒளிகாலும் திருவுருவத்திலே அன்னையின் அன்பே தெரிகிறது. உறவுகளில் எல்லாம் சிறந்த உறவு அன்னையின் அன்பே தெரிகிறது. உறவு களில் எல்லாம் சிறந்த உறவு அன்னையே. அதுவே நாம் அறியும் முதல் உறவு. இறுதிவரை நினைத்து வாழும் உறவு. சுந்தரர் அன்னை யாம் இறைவனை நினைத்தாலே போதும் வேறு றினைப்புத் தேவையில்லை எனக் கூறுகிறார். இன்பத்திலும்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

துன்பத்திலும் அன்னையே நினைப்பே துணை யாக நிற்பது அதனையே சுந்தரரும் வலியுறுத்துகிறது.

சுந்தரர் பாடல்களிலே இறைவன் வருணிக்கும் பாங்கு அவரது தமிழ்ப்புலமையைக் காட்டி நிற்கிறது. *ஆர்தல்* என அவர் பயன்படுத்தியுள்ள சொல் கூறவந்த கருத்தைத் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கிறது. மனம் நிறைவாகச் செயற்படும் நிலையை இச் சொல் காட்டி நிற்கிறது. பொன்னும் மின்னும் ஒளிகாலும் தன்மையில் ஒன்றுபட்டவை. நாம் பார்க்கும் போது பளிச்சென்று தோன்றும் தன்மையுடையவை . அரையிலே அணியும் புலித்தோலை *அசைத்து* என்று குறிப்பிடுகிறார். அரையிலே அணியும் ஆடை கவனமாக இறுக்கமாக அணியப்படவேண்டும் என்பதை இச்சொல் விளக்கி நிற்கிறது. அன்னையென்று இறைவனையே என்றும் நினைத்து வாழ்வதே சிறந்தது என்கிறார் சுந்தரர்.

“பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே”



- 13வது திருத்தச் சட்டத்தில் கீழ் உருவாக்கப்பட்ட மாகாணசபையை இயங்கவைத்தல்
- வடக்கு மாகாணசபைக்கான தேர்தலை நடத்துதல்
- முன்னாள் போராளிகளை ஒரு வருடத்துக்குள் பெற்றோரிடம் கையளித்தல்
- யாழ் – கண்டி ஏ–9 வீதியை அதிவேகப் பாதையாக மேம்படுத்தல்
- சுதந்திரத்தின் அடையாள நகரமாக மாங்குளத்தை அபிவிருத்தி செய்து மக்களிடம் கையளித்தல்
- யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம், தொழில்நுட்பக் கல்லூரி விடுதி வசதி விஸ்தரிப்பு
- 2012இல் யாழ்ப்பாணத்தை தெற்காசியாவின் அதிசிறந்த நகரமாக்கல்



இத்தனையும் செய்து முடிக்க உறுதியளித்த ஒருவரா?

அல்லது...

'இல்லாத' ஆவணத்தில் 'சொல்லாத' விடயங்களை முன்னிறுத்துபவர்களா?

# தமிழ் மக்கள் புத்திசாதுரியமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டிய தருணமிது

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

## ✲ ஐ.பி.எல். அணிகளில் வீரர்கள் புறக்கணிப்பு ✲

# மூக்கு அறுக்கும் செயலென இந்தியா மீது பாக். ஆவேசம்; நட்புறவும் பாதிக்குமாம்

(இஸ்லாமாபாத்)

ஐ.பி.எல். 'இருபது -20' அணிகளுக்கான ஏலத்தில் பாகிஸ்தான் வீரர்கள் யாரும் விலைக்கு வாங்கப்படாதது பாகிஸ்தானுக்கு கடும் கோபத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.



இவ்வாறு வீரர்கள் புறக்கணிக்கப்பட்டமையால் இந்தியா -பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான உறவிலும் பாதிப்பு ஏற்படுமென பாகிஸ்தான் அரசும் கிரிக்கெட் சபையினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது ,

ஐ.பி.எல். ஏலத்தில் பாகிஸ்தான் வீரர்களை தேர்வு செய்யாமல் லலித் மோடி நம்பிக்கை துரோகம் செய்து விட்டார். இதனை இந்திய கிரிக்கெட் சபையிடம் (பி.சி.சி.ஐ) முறையிடப் போகிறோம் என பாகிஸ்தான் கிரிக்கெட் (பி.சி.பி) தலைவர் இஜாஸ் பட் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் எதிர்வரும் மார்ச் 12 முதல் ஏப்ரல் 25ஆம் திகதி வரை மூன்றாவது கட்ட ஐ.பி.எல். இருபது-20 போட்டிகள் நடக்கவுள்ளது. இதற்கான வீரர்கள் தேர்வு செய்ய கடந்த செவ்வாய்க்கிழமை மும்மையில் ஏலம் நடந்தது. இதில் பாகிஸ்தான் இருபது -20 கிரிக்கெட் அணியின் தலைவர் அப்ரிடி உட்பட 11 வீரர்கள் தேர்வாகும் வாய்ப்பில் இருந்தனர். ஆனால் ஒருவரை கூட ஐ.பி.எல். அணி நிர்வாகங்கள் தேர்வு செய்யவில்லை.

அதிர்ச்சியடைந்த பி.சி.பி.தலைவர் இஜாஸ் பட் கூறியது ,

தொடரில் எங்கள் வீரர்கள் பங்கேற்பது குறித்து ஐ.பி.எல். தலைவர் லலித் மோடியிடம் பலமுறை பேசி இருந்தேன். அவரும் வீரர்களுக்கு கட்டாயம் வாய்ப்பு அளிக்கப்படும் என உறுதி தெரிவித்து இருந்தார். ஆனால் இப்போது என்ன நடந்தது என்றே எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஏனெனில் இதில் பங்கேற்பதற்கு எந்த சிக்கலும் இருக்கக்கூடாது என்பதற்காக எங்கள் அரசிடம் இருந்து வீரர்களுக்கு முன்னதாகவே அனுமதி பெற்று தந்திருந்தோம். இப்போது அவை அனைத்தும் வீணாகி விட்டது. இது குறித்து லலித் மோடியை தொடர்பு கொண்டால் அவர் பேச மறுக்கிறார். இவ் விடயத்தை நாங்கள் பி.சி.சி.ஐயிடம் கொண்டு செல்ல உள்ளோம். இவ்வாறு இஜாஸ் பட் கூறினார்.

### மியாண்தத் வேண்டுகோள்

இருபது -20 போட்டிகள் நடத்தும் உரிமையை சர்வதேச கிரிக்கெட் சபை கையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என பி.சி.பியின் பொது இயக்குநர் ஜாவித் மியாண்தத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், ஐ.பி.எல். நிர்வாகம் வீரர்களை மட்டுமல்ல; எங்கள் ஒட்டுமொத்த தேசத்தையே அவமதித்துள்ளது. ஐ.பி.எல். தொடரில் டெஸ்ட் விளையாடும் நாடுகளை சேர்ந்த வீரர்கள் உறுதியாக பங்கேற்க ஐ.சி.சி. தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என்றார்.

இதேவேளை மும்பையில் ஐ.பி.எல். கிரிக்கெட் இருபது -20 அணிக்கான ஏலத்தில் பாகிஸ்தான் வீரர்கள் யாரும் விலைக்கு வாங்கப்படாதது பாகிஸ்தானுக்கு கடும் கோபத்தையும், எரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு புறக்கணிக்கப்பட்டது இரு நாட்டு உறவிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அந்நாட்டு உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் கூறியுள்ளார்.

### நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு

இந்நிலையில் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் இந்த விவகாரம் வெடித்தது. இதில் எதிர்க்கட்சிகள் இந்தியாவின் இந்த மூக்கறுப்புக்கு கண்டனம் தெரிவித்தனர். தொடர்ந்து உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் கூறுகையில்,

. இந்தியாவில் நடந்த ஏலத்தில் பாகிஸ்தான் வீரர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு புறக் கணிக்கப்பட்டுள்ளனர். இது பாகிஸ்தானுக்கு மூக்கறுப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு நடந்து கொள்வது இருநாட்டு உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

இந்தியாவில் இனி பாகிஸ்தான் விளையாடலாமா என்பது குறித்தும், கேள்வி எழுந்துள்ளது. இதுகுறித்து சபாநாயகர் பக்மிதா மிர்சா கூறுகையில்,

இந்தியாவுக்கு செல்ல வேண்டியிருந்த பாகிஸ்தானிய நாடாளுமன்றக் குழுவினர் செல்ல மாட்டார்கள் என கூறியுள்ளார். பாகிஸ்தான் விளையாட்டுத்துறை அமைச்சரும் எதிர்காலத்தில் இந்தியாவுடனான விளையாட்டு ரீதியிலான ஒப்பந்தம், நடவடிக்கை இருக்காது என்றும் கூறியுள்ளார்.


பாகிஸ்தானின் இந்தப் பேச்சுக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மறுப்புத் தெரிவித்துள்ளார். ஐ.பி.எல். அமைப்பு வர்த்தக ரீதியானது. இதற்கும் இந்திய அரசுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது .

வீரர்கள் விலை நிர்ணயிப்பது மற்றும் ஏலம் நடத்துவது ஐ.பி.எல்தான். இரு நாட்டு உறவைப்பாதிக்கும் படி இந்தியா நடக்கவில்லை. இந்திய அரசுக்கும், இந்த அமைப்பிற்கும்தொடர்பு இருப்பதாக பாகிஸ்தான் நினைக்கிறது என்றார்.

### பாதுகாப்புப் பிரச்சினை


பாகிஸ்தான் வீரர்களை ஐ.பி.எல். திட்டமிட்டே புறக்கணித்துள்ளதாக செய்தி வட்டாரம் தெரிவிக்கிறது. அதாவது பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்கும் பட்சத்தில் பாதுகாப்புப் பிரச்சினை மற்றும் தேவையில்லாத சட்ட ஒழுங்கு விவகாரம் எழும் என்ற சந்தேகத்தினால் புறக்கணிக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.மும்பை தாக்குதல் அடுத்து இந்த நிலைக்கு வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.





வவுனியா அமலமரித்தியாகிகள் கலைத் தொடர்பு நிலையத்தின் கரவையூர் செல்வத்தின் ''உனக்கு நீதான் தலைவன் தலைவி'' பாடல் இறுவெட்டு வெளியீடு யாழ்ப்பாணத் தொடர்பகத்தில் இடம்பெற்றது. இதில் இறுவெட்டினை யாழ். மாகாணக் குரு முதல்வர் அருட்பணி போல் நட்சத்திரம் வெளியிட்டு வைக்க யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் பெற்றுக் கொள்வதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும், பாகிஸ்தான் பியற்றா மறைமாவட்ட அருட் பணியாளர் பேரருள் திரு விக்ரர் ஞானப்பிரகாசம் மற்றும் போல் நட்சத்திரம், ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

படங்கள்: சுதாகர்


லங்கா வோல்டைல் மற்றும் லங்கா டைல்ஸ் நிறுவனங்களின் யாழ்ப்பாண காட்சியறை நேற்று ஸ்ரான்லி வீதியில் திறந்துவைக்கப்பட்டது. இந் நிகழ்வில் லங்கா வோல்டைல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மகேந்திர ஜெயசேகர முதலாவது விற்பனையை ஆரம்பித்து உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## யாருக்கு ஆதரவு வழங்கு...

இதே போன்றுதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட சிறுபான்மை மக்களுக்காக ஒரு சரியான முடிவை இப்போது வழங்கியுள்ளது.

போரிற்கு பின்னதான இக்காலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தேவை தற்சமயம் ஏற்பட்டுள்ளது.இதுவரை காலமும் தமிழ் முஸ்லிம் மக்கள் பிரிந்திருந்து இன்று எந்த ஒரு நன்மையும் காணவில்லை.தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து ஒரு கட்சி உருவாக்கப்பட்டு எமது உரிமைகளை பெற்றெடுக்க வேண்டும்.

தமிழ் தலைவர்கள் முஸ்லிம் சமூகத்திற்கு செய்த சேவையை யாராலும் மறக்க முடியாது. அதன் அடிப்படையில் உருவானதுதான் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி.

தற்போது இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இரு பிரதான வேட்பாளர்களும் 50 வீதத்திற்கு குறைவான வாக்குகளை பெறும் போது சிறுபான்மையினரின் வாக்கு பலம் பெறும்.

சிறுபான்மையினருக்கு பேரம் பேசும் சக்தி வேண்டும் என்றால் எங்களுடைய வாக்கு அவர்களை தீர்மானிக்கின்ற சக்தியாக மாற்றப்பட வேண்டும்.தமிழ் மக்களுக்கான உரிமையை வழங்குவோம் என்று கூறியவர்கள் சிங்களத் தலைவர்கள் தான். ஆனால் இது வரைக்கும் எந்தத் தீர்வையும் முன்வைக்கவில்லை.ஆனால் உரிமையைக் கேட்டபோது அவர்களை பயங்கரவாதியென முத்திரை குத்தியுள்ளனர் என்றார். (ச-7)

## கொழும்பில் நேற்று...

எப்போது கைது செய்யப்பட்டார்கள் என்பதையோ அவர் அறிவிக்கவில்லை.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதி எனக் கூறப்படும் எமில் காந்தனுடன்தாம் நின்றதாக கூறப்படும் புகைப்படத்தை ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஊடக சந்திப்பில் காட்டியமை தொடர்பில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான நாமல் ராஜபக்ஷ நேற்று இரகசிய பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இரகசிய பொலிஸ் பிரிவினரின் தகவல்படி இந்த புகைப்படம் உண்மையானதல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-5)

## வன்முறையற்ற தேர்தலை...

ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இலங்கையில் நீண்டகால சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் வன்முறைகள் அற்ற தேர்தல் நடத்தப்படவேண்டும்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர் நாடு முழுவதிலும் நடத்தப்படும் முதலாவது தேர்தல் என்பதால் இந்தத் தேர் தல் முக்கியத் துவம் வாய்ந்ததாக அமைந் துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இரண்டு பிரதான தரப்பின ருக்கும் இடையிலான முறுகல்களினால் வாக்களிப்பில் சகலரும் கலந்து கொண்டு தங்களது அபிலாஷைகளை வெளிப்படுத்துவார்களா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகதேர்தல் கண்காணிப்பாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ச)

## இராணுவ ஆட்சியை அமைக்...

சுயாதீனமாக செயற்பட வேண்டிய இராணு வத்தை மகிந்த ராஜபக்ஷவும் கூட்டமைப்பு அரசாங்கமும் அரசியல் மயப்படுத்தி வருவதாகவும் இது மிகவும் தவறான முன்னுதாரணமாக கருதமுடியும் எனவும் அனுரகுமார திஸநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு றோயல் மாவத்தையில் உள்ள ஜெனரல் பொன்சேகாவின் தேர்தல் அலு வலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,பாதுகாப்புச் செயலாளர் தேர்தல் சட்டங்களை கடுமையாக மீறி பகிரங்க கூட்டங் களில் உரையாற்றுவதுடன் உயர் இராணுவ அதிகாரிகள் ஊடகங்கள் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஜனாதிபதிக்கு சார்பான கருத்துக்களை வெளியிட்டுவருகின்றனர்.

கமல் குணரத்ன, சவேந்திர சில்வா போன்ற இராணுவ அதிகாரிகள் யுத்தத்தில் மேற்கொண்ட பொறுப்புக்களை மதிக்கின்றோம். இதனால் இராணுவ சீருடையை அணிந்து கொண்டு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என அவர்களிடம் மிகவும் கௌரவமான முறையில் கேட்டுக் கொள்கின்றோம். இதன் செயற்பாடுகளின் முடிவு என்ன? தாம் விரும்பிய தலைவர் தோல்வியடையும் பட்சத்தில் அவரை அதிகாரத்தில் வைத்திருக்க இவர்கள் முயற்சிக்க மாட்டார்கள் என நினைக்க முடியுமா? இதனால் மாற்றங்களை உணர்ந்து கொள்ளாது இராணுவம் அரசியல் மயப்படுத்தப்பட்டதால் சில உலக நாடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு இலங்கைக்கும் ஏற்படக் கூடும்.

ஜெனரல் சரத்பொன்சேகா அரசியல்களுக்குள் பிரவேசிக்கும் போது, அவர் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தவே அரசியலுக்குள் பிரவேசித்துள்ளதாக அரசாங்கம் கூறியது. இராணுவ ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமானால் அவர் வாக்கு கேட்க வேண்டுமா? அவர் ஜனநாயக உரிமைகளை மதித்தே அரசியலில் ஈடுபட்டுள்ளார். அதேவேளை ஜெனரல் சரத்பொன்சேகா தமது கூட்டம் அல்லது ஊடகவியலாளர் மாநாட்டில் குண்டொன்றை வெடிக்க செய்ய உள்ளதாக விமல் வீரவன்ஸ எந்த அடிப்படையில் தெரிவித்துள்ளார் என்பது குறித்து அவரிடம் ரகசியபொலிஸார் விசாரணை நடத்த வேண்டும்.

வீரவன்ஸவின் கருத்து மூலம் ஜெனரல் சரத் பொன்சேகாவை கொலை செய்யும் பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. ரகசிய காவற்றுறையினருக்கு முதுகெலும்பு இருக்குமானால் வீரவன்ஸவிடம் விசாரணை நடத்த வேண்டும். அதேபோல் அரசாங்கம் எதிர்க் கட்சியினர் வாக்கு கொள்ளையில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளது. அரசாங்கம் வாக்கு கொள்ளையில் ஈடுபட தயாராகி வருவது இதன் மூலம் தெளிவாகியுள்ளதாக அனுரகுமார திஸநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ச)

## புலிகளிடமிருந்து பிளவடை...

எனினும், அப்போது ஆட்சி நடத்திய ஐக்கிய தேசிய தேசியக்கட்சி தமக்கு பல்வேறு சலுகைகளை வழங்குவதாகவாக்குறுதியளித்திருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளிடமிருந்து பிளவடைந்த காலத்தில் ஜே.வி.பி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியன தம்மை புகழ்ந்து பாராட்டியதாகவும், தற்போது ஜனாதிபதிக்கு ஆதரவளித்து வருகின்ற காரணத்தினால் ஓர் கொலைகாரனாகவும், தேசத்துரோகியாவும் குறித்த கட்சிகள் பிரசாரம் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் 500 காவல்துறை உத்தியோகத்தர் படுகொலை மற்றும் அரந்தலாவை பௌத்த பிக்கு படுகொலைச் சம்பவங்களுடன் தமக்கு தொடர்பில்லை எனவும், அந்தப் படுகொலைகளை பொட்டு அம்மான் மேற் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உறவினர்கள் கொல்லப்பட்ட காரணத்தினால் புலிகள் இயக்கத்தில்இணைந்து கொண்டதாகவும், யுத்தம் அர்த்தமற்றதென உணர்ந்து கொண்டதனால் அமைப்பிலிருந்து விலகியதாக அவர் தெரிவித்துள்ளார். (ச)

## பகிரங்க விவாதத்துக்கு...

சர்வாதிகார வெறியுடன் கூடிய ஜனாதிபதியையும், அவரது குடும்ப கூட்டுத்தாபனத்தையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஜனநாயகத்தையும், சட்டத்தையும், சமாதானத்தை யும் உறுதிப்படுத்திய பின்னரே நாம் இந்தப் பயணத்தை நிறுத்துவோம்.

தோல்வியை உணர்ந்து கொண்டுள்ள அரசாங்கம் பல்வேறு கீழ்த்தரமான நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகிறது.

தற்போது இவர்களுக்கு தூக்கம் வருவதில்லை. தான் இராணுவத்தளபதியாக பணியாற்றியக் காலத்தில் அரச மாளிகைகளை அமைத்து, சகோதர நிறுவனங்களை கட்டியெழுப்பி, குடும்பக் கூட்டுத்தாபனத்தை உருவாக்கி நாடு முழுவதும் சொத்துக்களை கொள்வனவு செய்ய வில்லை எனவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலத்தில் மக்களின் பாதுகாப்பை யும், வாழ்க்கையையும் சிந்தித்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டது போன்று எதிர்காலத்திலும் செயற்படுவோம்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, குடும்பங்களை வலுப்படுத்தும்வரை தாம் இந்தப்பயணத்தைத் முன்னெடுக்க எண்ணியுள்ளதாக பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (ச)

Computer Engineer -USA
Per Module தற்போதைய கட்டணம்
~~Rs 15000~~ Rs.3800
கற்கும் அனைவருக்கும் Free Courses
ICDL-Computer Driving Lincence)
Dip.. in hardware
A+,N+ (ComTIA)
இச்சலுகை 25.01.2010 வரை மட்டுமே.
MCS
Supported By UNDP/JRRP
T.P-772395895
விபரங்களுக்கு நேரில்
324, பலாலி வீதி,
பரமேஸ்வராசந்தி அருகில்
யாழ்ப்பாணம், Bus Root - 764

LAVA HOSPITAL
75, கோயில் வீதி (I.C.R.C. சந்தி அருகில்),
யாழ்ப்பாணம். T.P. :- 021 222 4333
SCAN, ECG மற்றும் இரத்த, சல
பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.
அடிப்படை உடற்பரிசோதனைகள்.
உடல் பருமனுள்ளவர்களைப் பரிசோதிப்பதற்கான
'OBESITY' PACKAGE Rs. 1200 /=
(C-3869)

ஜனாதிபதித் தேர்தல்-2010
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்
மாபெரும் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம்
தலைமை:- கௌரவ சுரேஷ் க.பிரேமச்சந்திரன் பா.உ.யாழ்ப்பாணம்
இடம்:- நல்லூர் சங்கிலியன் தோப்பு
காலம்:- 23.01.2010 (சனி) மாலை 3.30 மணி
தமிழ் மக்களின் மூத்த தலைவர் கௌரவ இரா.சம்பந்தன் (பா.உ.திருமலை) அவர்கள் உட்பட வடக்கு-கிழக்கின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் உரையாற்றவுள்ளனர்.
ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அனைவரையும் அணிதிரண்டு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
(394)


நமது பிரதேசத்தில்
மீண்டும் பாடசாலைகள் ஆரம்பம்
மேலும் கல்வியை மேம்படுத்த
தொழில் வாய்ப்புக்களைப் பெற...
மஹிந்த ராஜபக்ஷ
எங்கள் தெரிவு
தமிழர்தம் வாழ்வில் வீசட்டும் வசந்தம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.